Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!
மகாராசி சில்க்ஸ்
மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P.No : 0777286247.
(சி/2203)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 25 (14.07.2004) புதன்கிழமை இதழ் :285

# கருணா விவகாரத்தைப் பயன்படுத்தி படுகொலைகள், குழப்பங்களைச் செய்வதை அரசாங்கம் உடனடியாக நிறுத்தவேண்டும்!

## பிரட்ஸ்கரிடம் தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

(கொழும்பு)

**கருணா விவகாரத்தை வைத்துக்கொண்டு சீர்குலைவுகளையும், படுகொலைகளையும், குழப்பங்களையும் தொடர்ச்சியாக மேற்கொள்வது ஒட்டுமொத்த சமாதான சூழ்நிலையை சீர்குலைக்கும் என்றும் –**

**இதனைத் தடுத்து நிலைமையைச் சீராக்க அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்றும், தமிழீழ அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நோர்வேத் தூதுவர் ஹான்ட்ஸ் பிரட்ஸ்கர் மூலம் அரசாங்கத்திடம் வலியுறுத்தித் தெரிவித்துள்ளார்.**

**நேற்றைய சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே இந்தத் தகவலை சு.ப.தமிழ்ச்செல்வன் வெளியிட்டார்.**

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

இந்தச் சந்திப்பில் முக்கியமாக தற்போது ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலைகள் சம்பந்தமாக யுத்தநிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாகவே அதிகமாகப் பேசப்பட்டது. அதுதான் முதன்மையான விடயம்.

நாங்கள் நிலைமைகளைத் தெளிவாக்கியுள்ளோம். இப்பொழுது யுத்த நிறுத்த சூழலை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமைகளை, முக்கியமாக மட்டக்களப்பு மாவட்டத்திலே நடக்கின்ற சில நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டி இருக்கின்றோம்.

அதில் இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையை உறுதியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்று எண்ணினால் அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை அர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த சேனாதிராசா நேற்று வீரச்சாவு!



(மட்டக்களப்பு)

கருணா குழுவைச் சேர்ந்தோர் எனச் சந்தேகிக்கப்படுவோரால், சுடப்பட்டு படுகாயமடைந்த நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த - தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியல் பொறுப்பாளர் சேனாதிராசா நேற்று உயிரிழந்தார்.

கரும்புலிகள் தினமான கடந்த 5ஆம் திகதி இவரும் இன்னொரு போராளியும் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது - இனந்தெரியாத நபர்கள் அரசடி வீதியில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த சேனாதிராசாவுக்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை (12 ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் ரமேஷ், கௌசல்யன் ஹெலி மூலம் கிளிநொச்சிக்கு

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத்தளபதி கேணல் ரமேஷ் மற்றும் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் இருவரும் நேற்று கிளிநொச்சி வந்தனர்.

நேற்றுக்காலை எட்டு மணியளவில் கரடியனாறு பாடசாலை மைதானத்துக்கு போர் நிறுத்திக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளுடன் சென்ற இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் மூலமே இவர்கள் இருவரும் கிளிநொச்சி வந்ததாக் தெரிவிக்கப்படுகிறது.

## போர் நிறுத்த உடன்பாடு குறித்து நோர்வே தூதுவர் பிரட்ஸ்கர் தமிழ்ச்செல்வனுடன் பேச்சு!

(கிளிநொச்சி)

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை மற்றும் போர்நிறுத்த உடன்பாட்டை உறுதியாகக் கடைப்பிடிப்பு உள்ளிட்ட முக்கிய விடயங்களை ஆராய்வதற்காக இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்தார்.

நேற்றுக் காலை விமானப்படை ஹெலி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த நோர்வேத் தூதுவர் ஹான்ஸ பிரட்ஸ்கர் தலைமையிலான குழுவினர் சமாதானச் செயலகத்தில் புலிகளின் குழுவினரைச் சந்தித்துப் பேசினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தத்தை கடைப்பிடிப்பதில் இரு தரப்பும் உறுதியாக உள்ளனர்!

### நோர்வே தூதுவர் பிரட்ஸ்கர்

(கிளிநொச்சி)

யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் கடைபிடிப்பது தொடர்பாக - அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் தெளிவாக இருப்பதாக வலியுறுத்தியுள்ளனரென இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை சந்தித்த பின்னர், செய்தியாளர் மத்தியில் கருத்துத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் ஒரு கெட்டமனிதர்; இந்திய ஆய்வாளர் கருத்து!



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வெளிவிவகார அமைச்சராகஇருக்கும் லக்ஷ்மன் கதிர்காமர் ஒரு கெட்ட மனிதர், ஆனாலும் அவருக்கும் இந்தியாவிற்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக புதுடில்லி நூல்நிலயம் மற்றும் நேரு தொல்பொருள் நிலையம் என்பவற்றின் ஆய்வாளரும் பத்திரிகையாளருமான ஸ்ரீநிமோகன் கே.ரிவிக்கு தெரிவித்தார்.

நேற்று யாழ். பல்கழைக்கழக பொருளியற்துறையினர் நடாத்திய 'அரச மாற்றமும் இலங்கை இனத்துவப் பிரச்சினையிலான இந்தியாவின் நிலைப்பாடு' என்ற தலைப்பில் இடம் பொற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் ஆரம்ப காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களது பிரச்சினை தொடர்பாக இந்தியமக்கள் கொண்டிருந்த நிலைப்பாடானது ராஜீவ் காந்தியின் கொலைச் சம்பவத்துடன் மாறிவிட்டது.

தென்னிந்தியத் தமிழர்களும் சரி, வட இந்தியரும் சரி இலங்கைத் தமிழ்மக்களது விடுதலைக்கான போராட்டத்தின் பால் அக்கறை காட்டாமை ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பிறகே ஏற்பட்டது.

இந்திய மக்கள் மத்தியில் ஏறபட்டுள்ள இக்கருத்துக்களை மாற்றியமைக்க வேண்டுமாயின் இவ்விரு நாட்டு மக்களும் சமூக

(12 ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் நோர்வே மற்றும் விடுதலைப் புலிகளின் தரப்புப் பிரதிநிதிகள்

# குண்டுகளுடன் கைதானவர்கள் விடுவிப்பு

(மட்டக்களப்பு)

தேச விரோத சக்திகளால் வழங்கப்பட்ட இரண்டு கைக்குண்டுகள், கையடக்கத் தொலைபேசி மற்றும் சிறுதொகை ரவை என்பவற்றை வைத்திருந்த மட்டக்களப்பு குருமன் வெளி - காளி கோவில் வீதியைச் சேர்ந்த குணம் - மிருதி (வயது19) என்பவர் நேற்று விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இவர் புலிகளின் விசாரணையை அடுத்து இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாதென அறிவுறுத்திய பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

இதேவேளை - கடந்த சனிக்கிழமை ஆலய மூலஸ்தானத்துக்குள் கைக்குண்டு மறைத்து வைத்திருந்ததாகத் தெரிவித்து கைதான ஆலயப் பூசகரான முத்துலிங்கம் - ரவீந்திரன் (வயது -28) என்பவரும் நேற்று விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதங் கள் வைத்திருந்த மேலும் இரண்டு தேச விரோதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.


(ப,தீ,லெ)

வட தமிழீழத்தில் உதயமாகி
அகிலமெங்கும் செய்தி பரப்பும்
நமது ஈழநாடு தினசரி
வன்னிப்பிரதேசத்தில் – கிளிநொச்சியில்
தனது முதலாவது கிளையை ஆரம்பித்து
சேவை செய்ய வருவதை
வாழ்த்தி வரவேற்கின்றோம்.
வேளாண் பெருமக்களின் உற்ற தோழன்
வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம்
தலைமைப் பணிமனை,
கண்டிச்சாலை,
கிளிநொச்சி.
(C-2758)

தாயகத்தின் முன்னோடி நாளிதழே
தமிழர்தம் தனிக்குரலே – உன்
நற்றமிழ்ப் பணி தொடர
எம் வாழ்த்துக்கள்.



இரத்தினம் உதிரிகள் வாணிபம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.




# நடுவப்பணிமனை இன்று திறப்புவிழா

(கொக்குவில்)

யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்திற்கான நடுவப்பணிமனை இன்று காலை 11 மணிக்கு காங்கேசன்துறை வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பொதுச்சுடரேற்றல், அக வணக்கம், பெயர்ப்பலகை திரைநீக்கம், நடுவப்பணிமனையைத் திறந்து வைத்தல், வரவேற்புரை, தலைமையுரை, சிறப்புரைகள், நன்றியுரை என்பன நடைபெறவிருக்கிறது. (206)

# வீரமா பிடாரி அம்மன் மஹோற்சவம்

(கொக்குவில்)

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு ரதோற்சவமும், 21 ஆம திகதி காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும், 22 ஆம் திகதி மாலை 3 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும்.

தினமும் மாலை 5.30 மணிக்கு திருவிழாப் பூசைகளும், 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் திருவீதி எழுந்தருள்வார். (206)

## பாலர் பாடசாலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பருத்தித்துறையிலுள்ள எரிஞ்சம்பன் கோவிலடி பாலர் பாடசாலை திறந்து வைக்கப்படவுள்ளது.

வியாபாரிமூலை, மயிலிட்டித்துறை கடற்தொழிலாளர் சங்கத்தின் அனுசரணையுடன் நாளை பிற்பகல் 3.30 மணியளவில் இந்தச் சிறுவர் முன்பள்ளியை யாழ்.மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி திறந்துவைக்கவுள்ளார்.

## நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம்

நாவாந்துறை சென்.நீக்கலஸ் கடற்தொழிலாளர் சங்கத்தின் புதிய நிர்வாகக் குழுத்தெரிவு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நீண்டகாலமாக இந்தச் சங்கத்தின் செயற்பாடுகள் தடைப்பட்டிருந்த நிலையில் தற்போது அதன் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# வயோதிபரின் சடலம் சந்நிதியில் மீட்பு!

(வடமராட்சி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவில் பகுதியில் அநாதரவாக இருந்த வயோதிபரின் சடலம் ஒன்று அந்தப்பகுதி கிராமசேவகரினால் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை வயோதிபரின் சடலம் அடையாளம் காணப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (17)

# முதன்மை ஆசிரியர்கள் கொழும்புக்கு அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சைக்கான வினாத்தாள்களை எடுத்து வருவதற்காக முதன்மை ஆசிரியர்கள் நாளை கொழும்பு செல்கின்றனர்.

சங்கீதம், நடனம், மனையியல் ஆகிய பாடங்களுக்கான செயன் முறைப் பரீட்சைக்கான வினாத்தாள்களை எடுத்து வருவதற்காகவே இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் கல்வியமைச்சே குடாநாட்டுக்கான வினாத் தாள்களை அனுப்பி வந்தது.

இந்தமுறை குறிப்பிட்ட பாடங்களின் முதன்மை ஆசிரியர்களைக் கொழும்புக்கு அழைத்து மேற்படி பாடங்களுக்கான வினாத்தாள்களை இவர்களிடம் கையளிக்கவுள்ளதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

# மண் கடத்தியவர்களை தடுத்த இருவருக்கு கத்திக்குத்து!

சட்டவிரோதமாக இரவுவேளை மண் கடத்தியவர்களை தடுத்த இருவர் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை துன்னாலை, குடவத்தைப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த சிங்கராஜா (வயது 40) புஸ்பராசா (வயது 25) ஆகிய இருவருமே தாக்கப்பட்டனர்.

இவ்வாறு தாக்கப்பட்ட இருவரும் தற்போது மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (12)

## ஆலயம் செல்வதற்கு படையினர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை கவுணாத்தை வைரவர் ஆலயத்திற்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அடியார்கள் சென்று வழிபடுவதற்கு பாதுகாப்புப்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். (72)

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்றுமட்டும்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த கில்லி



வியாழன் முதல்
அர்ஜீன், ரஞ்சிதா, அனித்தா நடித்த
ஜெய்ஹிந்த்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு 8.45(பு.நே)
The Guru (சி-2723)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்றுமுதல் சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார், சுஜாதா, வடிவேலு நடித்த



காட்சிநேரம்:-10.30, 2.30 6.30, 9.30 (பு.நே)
மானஸ்தன்
(சி-2725)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், சிம்ரன் நடித்த



துள்ளாத மனமும் துள்ளும்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

## பெயர் மாற்றம்

கணபதி பசுபதி, பெண் பாண்டாவி பாக்கியம் ஆகியோருக்கு செல்வநாயகபுரம் அச்சுவேலியில் 1977 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 12 ஆம் திகதி பிறந்த சீவரெத்தினம் பசுபதி ஆகிய நான் 13.07.2004 முதல் எனது பெயரினை **ஜீவராணி பசுபதி** எனப் பெயர் மாற்றம் செய்வதோடு, இன்று தொடக்கம் ஜீவராணி என்ற பெயரே சகல ஆவணங்களிலும் பேணப்படும் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

இப்படிக்கு,
சீவரெத்தினம் பசுபதி.

## கொழும்பு குண்டுவெடிப்பு

# தனிப்பட்ட தாக்குதலெனக் கூறுவது கேலிக்கூத்தான ஒரு விடயம்!

### அரசு மீது ஐ.தே.க கண்டனம்

கொழும்பில் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அரசாங்கத்துக்குத் தொடர்பில்லாத தனிப்பட்ட தாக்குதல் சம்பவமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் வர்ணிப்பது கேலிக்கூத்தான விடயம் என ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம் தெரிவித்தது.

இந்தக் குண்டுவெடிப்பில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களும் மற்றும் கொல்லப்பட்ட 4 பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்பத்தவர்களும் அரசாங்கத்தின் இந்தப் பொறுப்பற்ற அறிக்கை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டுமெனவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

கொழும்பில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பத்திரிகையாளர் மாநாட்டிலேயே கட்சியின் பேச்சாளர் ரவீந்திர ரந்தெனிய இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தொடர்ந்து இடம்பெற்று வரும் கொலைகள் மற்றும் அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் காரணமாக, யுத்தநிறுத்த ஒப்பந்தம் பாதிக்கப்பட்டுவிடலாம் என இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்திருந்தது.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் தற்கொலைக் குண்டுத்தாக்குதலை மேற்கொண்ட குண்டுதாரி - ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்திலேயே கொழும்புக்குள் ஊடுருவிய தற்கொலைக் குண்டுதாரிகளுள் ஒருவர் எனக் கூறிவரும் அரசாங்கம், ஐக்கிய தேசியக்கட்சியிடமிருந்து பாதுகாப்பு அமைச்சைக் கடந்த வருடம் நவம்பர் மாதம் ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றுக் கொண்டதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் இடம்பெற்ற பல கொலைச் சம்பவங்களின் போதும், சமாதான முயற்சிகள் பாதிக்கப்படாதது போல, இந்தச் சம்பவத்தினாலும் சமாதான முயற்சிகள் பாதிக்கக்கூடாது என்று அரசாங்கம் பிரசாரம் செய்துவருகிறது.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றபோது, இது போன்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் எதுவும் இடம்பெறவில்லை என்றும் தெரிவித்தார்.

## முதலீட்டு ஒப்பந்தத்தில் அமெரிக்கா கைச்சாத்து

இலங்கையும், அமெரிக்காவும் நேற்றுமுன்தினம் முதலீட்டு வரி விலக்கு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

இந்த ஒப்பந்தத்தில் நிதியமைச்சின் செயலரும், அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட்டும் நேற்றுமுன்தினம் கைச்சாத்திட்டனர்.

இதன்மூலம் அமெரிக்காவின் முதலீடுகளின் போது இலங்கையில் ஆரம்ப வரியை மாத்திரமே அறவிட வழிசெய்யப்பட்டுள்ளது.

முன்னர் ஒவ்வொரு தடவையும் முதலீடு மேற்கொள்கின்ற போதும், வரியை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அலையில் சிக்கி ஒருவர் மரணம்

(கொழும்பு)

காலிமுகத்திடலில் கடல் அலையில் சிக்கி இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். அவரைக் காப்பாற்ற முற்பட்ட ஒருவர் காணாமற்போனார்.

நேற்றுமுன்தினம் இந்த இளைஞர்கள் கரையில் விளையாடிக்கொண்டிருந்த வேளையில் ஒருவரை கடல் அலை அள்ளிச்சென்றது. இவரைக் காப்பாற்றச் சென்ற இன்னொருவரையும் அலை அள்ளிச்சென்றுள்ளது.

காணாமற்போனவரை தேடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# பெரும்பான்மையை நிரூபிக்க அரசாங்கம் தயாராம்!

### விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதற்கு தாம் தயாராக இருப்பதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஐக்கிய தேசியக் கட்சியின் பொய் கூறும் அரசியலை மூன்றாவது தடவையாகவும் மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள் என்பது இந்தத் தேர்தலின் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, அதிகாரத்துக்கு வருவதற்கு முன்பு ஐக்கிய தேசியக் கட்சி நாட்டுக்குப் பொய்களைக் கூறியுள்ளது. மக்கள் அதனை ஏற்காமல் எமது கட்சியை அதிகாரத்தில் நியமித்தார்கள்.

இதன்பிறகு வடமேல் மாகாண சபைத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொய் கூறும் அரசியலை இரண்டாவது தடவையாகவும் மக்கள் மறுதலித்தனர். பொய்கூறும் அரசியலை இந்தத் தேர்தலில் மூன்றாவது தடவையாகவும் மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டார். (தே)

## மாகாணசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மேலும் 12 போனஸ் ஆசனங்கள்!

ஆறு மாகாண சபைகளுக்குமான தேர்தல் முடிவுகள் வெளிவந்துள்ள நிலையில் இந்த 6 மாகாண சபைகளிலும் வெற்றி பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மேலும் 12 போனஸ் ஆசனங்கள் கிடைத்துள்ளன.

எனினும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு எவ்வித போனஸ் ஆசனமும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் போனஸ் ஆசனங்களுடன் சப்பிரகமுவ மாகாண சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்துள்ளது.

மத்திய மாகாண சபையில் 30 ஆசனங்களும், மேல்மாகாணத்தில் 59 ஆசனங்களும், ஊவா மாகாணத்தில் 21 ஆசனங்களும், வட மத்திய மாகாணத்தில் 22 ஆசனங்களும், தென்மாகாணசபையில் 36 ஆசனங்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு கிடைத்துள்ளன.

இதேவேளை, இந்த மாகாண சபைகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர்களை நியமிக்க ஐக்கிய தேசியக்கட்சியின் அரசியல் குழு விரைவில் கூடவுள்ளது.

இது இவ்வாறிருக்க - மாகாண சபைகளிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்றிருப்பதை அடுத்து மத்திய அரசாங்கத்தில் அதனுடன் இணைந்து கொள்வது பற்றி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆலோசித்து வருகிறது.

அதேநேரம் மலையக மக்கள் முன்னணி மத்திய மாகாணசபையில் இணைந்து செயற்படுவது குறித்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது. (01)

## சுகாதார சேவை ஊழியர்கள் வெள்ளி முதல் உண்ணாவிரதம்

சுகாதார சேவை ஊழியர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.

தமது சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக்கோரி கடந்த வாரம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் சுகாதார சேவை ஊழியர்கள் பேச்சு நடத்தினர். எனினும் இதுவரை அதற்குரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே, தமது கோரிக்கையை வலியுறுத்தியே அவர்கள் 16 ஆம் திகதி முதல் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர். (01)

# மாகாணசபைகளின் நிர்வாகத்தை மேற்பார்வை செய்ய விசேட குழு!

### சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி இணைந்து அமைக்கும்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பி ஆகியன இணைந்து குழுவொன்றை அமைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏழு மாகாணசபைகளும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டில் வந்ததையடுத்து - அவற்றின் செயற்பாட்டை முன்னெடுத்துச்செல்லும் நோக்குடனேயே இந்த இணைந்த குழு அமைக்கப்படவுள்ளது.

மாகாணசபைகளின் சிறந்த நிர்வாகம், அபிவிருத்தி மற்றும் ஏனைய செயற்பாடுகள் குறித்து இந்தக் குழு ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், மாகாணசபைகளில் எந்த அமைச்சுப் பொறுப்புக்களையும் தாம் ஏற்கப்போவதில்லை என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மாகாணசபை முறை அவசியமற்றது எனக் கருதும் நிலையில், அதனைப் பலப்படுத்தும் அவசியம் ஜே.வி.பிக்கு இல்லையெனத் தெரிவித்த விமல் வீரவன்ச - மாகாண சபைகள் ஊடாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி உள்ளிட்ட நடவடிக்கைகளை கூட்டு முன்னணி என்ற வகையில் குறிப்பிட்ட குழு இணைந்து திட்டமிடும் எனத் தெரிவித்தார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தை அமுல் செய்யுமாறு கோரிக்கை!

பொலிஸ் உத்தியோகத்தர்களின் வாழ்க்கையை அவலத்திற்குள்ளாக்காது உடனடியாக பயங்கரவாத தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ் இன்ஸ்பெக்ரர் சங்கத்தினால் அரசிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சமாதான காலத்தில் இரண்டாவது தடவையும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டதை சுட்டிக்காட்டிய இந்தச் சங்கம் பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தைவிட புலிகள் கொழும்புக்குள் ஊடுருவுவதை வேறுவழிகளில் தடுக்கமுடியாது எனவும் தெரிவித்தது. (தே)

## மாகாணசபை முதலமைச்சர்கள் நாளைமறுதினம் பதவிப்பிரமாணம்

மாகாணசபைத் தேர்தலில் தெரிவாகியுள்ள மேல் மாகாணம், தென் மாகாணம், மத்திய, வடமத்திய, சப்ரகமுவ, ஊவா மாகாணங்களின் முதலமைச்சர்கள் நாளைமறுதினம் 16 ஆம் திகதி அந்தந்த மாகாணங்களின் ஆளுநர்களின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்வதற்கு முன் - கூட்டமைப்பின் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்குமான கூட்டமொன்று ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்துக்கு மகிபால ஹேரத், மேல் மாகாண சபைக்கு றெஜினோல்ட் கூரே, தென் மாகாணசபைக்கு விஜலால் டி சில்வா, மத்திய மாகாண சபைக்கு சரத் எக்கநாயக்க, வடமத்திய மாகாணசபைக்கு பிறேம்லால் திஸநாயக்க ஆகியோர் முதலமைச்சர்களாக பதவிப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர்.

இதுவரை முதலமைச்சர் யாரென அறிவிக்கப்படாத ஊவா மாகாண சபைக்கு ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முதலமைச்சரின் பெயர் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (தே)

# சிறுவனைக் காணவில்லை; தாயாரால் முறைப்பாடு!

சிறுவனைக் காணவில்லையென தாயார் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

துணைவி, சங்கரத்தையைச் சேர்ந்த விநாயகமூர்த்தி விசாகன் (வயது 09) என்ற சிறுவனே காணாமற்போயுள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி முதல் காணாமற்போயுள்ள இந்தச் சிறுவன் மூன்று மாதங்களுக்கு முன்னரும் ஒரு தடவை ஈச்சம்பழம் பறிப்பதற்காகச் சென்று காணாமற்போயிருந்தார்.

இவரை மாம்பழம் சந்திப்பகுதியில் சில இளைஞர்கள் கண்டுபிடித்துத் தாயாரிடம் சேர்ப்பித்திருந்தனர்.

தற்போதும் இவர் காணாமற்போயுள்ளமை குறித்து யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(ப)

# முல்லைத்தீவுக் கடற்பரப்பில் புலிகள் பயிற்சி எடுக்கிறார்களாம்

யுத்தநிறுத்தத்துக்கு மாறாக தமிழீழ விடுதலைப் புலிகள் தமக்குச் சொந்தமான அதிவேக தாக்குதல் படகைப் பயன்படுத்தி முல்லைத தீவு கடற்பரப்பில் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாக கடற்படையினர், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

முல்லைத்தீவு வெளிச்சவீட்டுக்குத் தென்மேற்குப்பகுதியில் அமைந்துள்ள கடற்பரப்பில் ஜுலை 10 ஆம் திகதியன்று பகல் 12 மணிக்கு புலிகளின் இந்தப் பயிற்சி நடவடிக்கை அவதானிக்கப்பட்டதாம்.

புலிகளின் படகு 33 நொட் வேகத்தில் முல்லைத்தீவுக் கடற்கரையிலிருந்து கடலில் பயணம் செய்துள்ளது.

கடற்படையினரை ஏற்றிக்கொண்டு கடற்படையின் தாக்குதல் படகு கடலில் பயணம் செய்து கொண் டிருந்த வேளையில் அதற்குச் சமாந்தரமாகப் புலிகளின் படகும் பயணம் செய்தது.

கடற்கரையிலிருந்து நான்கு மைல் அளவான தூரத்துக்கு வந்த கடற்புலிகள் மீண்டும் திருப்பிக் கொண்டு கடற்கரைக்குச் சென்றுவிட்டதாகவும் கடற்படையினர் முறைப்பாடு செய்துள்ளனராம். (தே)

### இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும்

# தோல்வியில் இருந்து இலங்கை மயிரிழையில் தப்பித்துக்கொண்டது



(சிட்னி)

அவுஸ்ரேலியாவின் கெயின்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இலங்கை-அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் - இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 193 என்ற நிலையில் இருந்த அவுஸ்ரேலிய அணி நேற்று இறுதிநாள் ஆட்டத்தில் இலங்கை அணியை எதிர்கொண்டது.

51 ஓட்டங்களுடன் இருந்த மாட்டின் நேற்றய ஆட்டத்தில் ஒரேயொரு ஓட்டத்தைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து லேமன் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த வீரர்கள் அனைவரும் இரட்டை இலக்க ஓட்டங்களைக்கூடப் பெற முடியாமல் ஆட்டமிழந்து சென்றனர்.

ஆயினும், எதிர்முனையில் - நேற்றுமுன்தினம் 68 ஓட்டங்களுடன் இருந்த ஹைடன் நேற்று அபாரமாக ஆடி சதம் அடித்தார். இவர் 169 பந்துகளில் 10 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் - 132 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 292 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

இரண்டாவது இனிங்ஸில், இலங்கை அணி சார்பில் பந்துவீசிய உபுல் சந்தன 101 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக் களையும், சொய்சா 34 ஓட்டங்க ளுக்கு 2 விக்கெட்டுக்களையும், டில்ஷான் 4 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பந்து வீச்சில் இலங்கை அணி வீரர்கள் - 25 உதிரி ஓட்டங்களையும் கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி வீரர்களுக்கு, அவுஸ்ரேலிய அணியின் பந்துவீச்சு பெரும் நெருக்கடியாக அமைந்தது.

அத்தபத்து - 9, ஜெயசூரிய - 22, சங்ககார 66, ஜெயவர்த்தன - 06, டில்ஷான் - 21, களுவிதாரண-14, சந்தன 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

வாஸ் 1 ஓட்டங்களுடனும், சொய்சா 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த நிலையில் இறுதி நாளான நேற்று இலங்கை அணி 8 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றிருந்ததால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

பந்துவீச்சில் ஷேன்வோன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். கிலெஸ்பி - 2, மக்ரா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் 517 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 292 ஓட்டங்களையும் பெற்றது.

இந்தப் போட்டியில் இலங்கை அணி தோல்வியடையக்கூடிய சந்தர்ப்பத்திலேயே ஆட்டம் முடிவுக்கு வந்ததால் தப்பித்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

### முத்தையா முரளிதரனின்

## சாதனையை சமப்படுத்தினார் அவுஸ்ரேலிய வீரர் ஷேன் வோன்



அவுஸ்ரேலிய அணியின் சுழற்பந்துவீச்சாளரான ஷேன் வோர்ன் இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான நேற்று, 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதன் மூலம் - முரளியின் 527 விக்கெட் சாதனையைச் சமப்படுத்தினார்.

527 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய முரளிதரன் உலகில் அதிகூடிய டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை படைத்திருந்தார். இவரது சாதனையை ஷேன் வோர்ன் நேற்று சமப்படுத்தினார். நேற்றைய போட்டியில் அவர் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தி, இந்தச் சாதனையைச் சமப்படுத்தினார்.




# நட்வெஸ்ட் தொடர் தோல்வி டெஸ்ட் போட்டியை பாதிக்காது

### மேற்கிந்திய அணித் தலைவர் பிரைன் லாரா கூறுகிறார்



(லண்டன்)

நட்வெஸ்ட் முத்தரப்புத் தொடர் இறுதிப் போட்டியில் அடைந்த தோல்வியானது இங்கிலாந்துக்கு எதிராக நடைபெறவிருக்கும் டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளை எந்தவிதத்திலும் பாதிக்காது என்று கப்டன் பிரைன் லாரா தெரிவித்தார்.

இங்கிலாந்தில் சமீபத்தில் நடைபெற்ற நட்வெஸ்ட் முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் நியூஸிலாந்து அணியிடம் 107 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் தோல்வியடைந்தது.

இந்த நிலையில் இங்கிலாந்து மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையேயான நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் இந்த மாதக் கடைசியில் ஆரம்பமாகின்றது.

இந்த வருட ஆரம்பத்தில் இங்கிலாந்து அணி மேற்கிந்தியத் தீவுக்குச் சென்றிருந்தபோது 3:0 என்ற நிலையில் இங்கிலாந்து அணி வென்றது. இதற்குப் பழிவாங்கும் விதமாக எதிர்வரும் தொடரை வெல்லும் முனைப்பில் மேற்கிந்தியத் தீவுகள் அணி உள்ளது.

இந்த நிலையில் முத்தரப்புத் தொடர் இறுதிப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தோல்வியடைந்தது. இந்தத் தோல்விக்கும், எதிர்வரும் இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடருக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. இந்தத் தோல்வியானது டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளை எந்த விதத்திலும் பாதிக்காது என்றும் பிரைன் லாரா தெரிவித்தார்.

முத்தரப்புத் தொடர் என்பது டெஸ்ட் தொடரில் இருந்து முற்றிலும் வித்தியாசமானது. தற்போது ஒருநாள் தொடர் முடிந்துவிட்டது. கடந்த இரண்டு மாதங்களாக நிறைய விடயங்களை நாங்கள் கற்றுக் கொண்டிருக்கிறோம்.

இது மட்டுமன்றி டெஸ்ட் தொடர் ஆரம்பமாகும் முன்பு இங்கிலாந்து சூழ்நிலைகளில் பயிற்சிப் போட்டிகளிலும் விளையாடவுள்ளோம். இங்கிலாந்து சூழ்நிலைக்கு எங்களுடைய வீரர்கள் தயாராகிக் கொண்டு வருகின்றனர். எதிர்வரும் டெஸ்ட் தொடருக்காக நாங்கள் நல்ல நிலையில் தயாராக இருக்கிறோம்.

நடைபெறவிருக்கும் பயிற்சி ஆட்டங்களைத் துடுப்பாட்ட வீரர்கள் நீண்ட நேரம் விளையாடவும், பந்து வீச்சாளர்கள் கட்டுப்பாட்டுடன் பந்து வீசவும் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று பிரைன் லாரா தெரிவித்தார்.

## அஸ்ரா கிண்ண கிரிக்கெட்; மத்திய கல்லூரி அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

அஸ்ரா கிண்ணத்துக்கான 14 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் - யூனியன் கல்லூரி அணியை யாழ். மத்திய கல்லூரி அணி தோற்கடித்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் - நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யூனியன் கல்லூரி முதலில் மத்திய கல்லூரி அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதனையடுத்து துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணி, 52 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 167 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தது.

ஆர்.சுகிர்தன் 38 ஓட்டங்களையும், எம்.மயூரன் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யூனியன் கல்லூரி அணி வீரர்கள் - எஸ்.பவகணேஸ் 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ரி.ஜெயவாணன் 49 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், எஸ்.ரஜந்தன் 45 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி 49.4 ஓவர்களில் 139 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன்மூலம் மத்திய கல்லூரி அணி 28 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் யூனியன் கல்லூரி சார்பில் கே.வக்கிரன் 55 ஓட்டங்களையும், கே.சுஜாந்தன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

# அவுஸ்ரேலிய - நியூஸிலாந்து அணிகளிடையே மிகப்பெரிய இடைவெளி இருக்கின்றது

### ஸ்ரீபன் பிளமிங் கூறுகிறார்



உலக சம்பியன் அவுஸ்ரேலியாவுக்கும், தங்களுக்குமிடையே மிகப்பெரிய இடைவெளி இருப்பதாக இங்கிலாந்தில் நடைபெற்ற முத்தரப்புத் தொடரில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணியின் கப்டன் பிளமிங் தெரிவித்தார்.

இங்கிலாந்து, நியூஸிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையேயான முத்தரப்பு ஒருநாள் போட்டித்தொடர் இங்கிலாந்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியின் இறுதிப் போட்டியில் விளையாட நியூஸிலாந்தும், மேற்கிந்தியத் தீவுகளும் தகுதிபெற்றன. இந்தப் போட்டியில் 107 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து வென்று சம்பியன் பட்டத்தைத் தட்டிச்சென்றது. பிளமிங் அதிரடியாக எடுத்த 67 ஓட்டங்கள், விற்றோரி வீழ்த்திய 5 விக்கெட்டுக்களின் உதவியுடன் நியூஸிலாந்து அணி வென்றது.

முத்தரப்புத் தொடரில் வெற்றி பெற்றாலும் தங்களுக்கும் அவுஸ்ரேலிய அணிக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி இருப்பதாக பிளமிங் தெரிவித்தார். இது குறித்துப் பிளமிங் கூறு கையில் -

'இந்த வெற்றியால் அவுஸ்ரேலிய அணியை நெருங்கிவிட்டதாக நான் நினைக்கவில்லை. அவுஸ்ரேலிய அணியை நெருங்க வேண்டுமெனில் பல விடயங்களில் நியூஸிலாந்து அணி முன்னேற்றம் பெற வேண்டும். ஆனால், தற்போது நியூஸிலாந்து அணி நல்ல முறையில் முன்னேறி வருகிறது'. என்று கூறினார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3:0 என்ற நிலையில் இழந்தாலும், இதுபற்றிக் கவலைப்படாத நியூஸிலாந்துக் கப்டன் பிளமிங் - ஒருநாள் போட்டிகளைப் போலவே, டெஸ்ட் போட்டிகளிலும் நியூஸிலாந்து அணி சிறப்பாக விளையாடும் எனத் தெரிவித்தார்.

வரும் செப்ரெம்பர் மாதம் இங்கிலாந்தில் நடைபெறவிருக்கும் ஐ.சி.சி சம்பியன் போட்டியில் - அவுஸ்ரேலியாவை எதிர்கொள்ளும் வாய்ப்பு, நியூஸிலாந்து அணி எந்த விதத்தில் பொருத்தமாக இருக்கிறது என்பது தெளிவாகும் என்றும் தெரிவித்தார்.

## ஹொக்கி போட்டி

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் பிற்பகல் 4 மணிக்கு கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதவுள்ளது.

## நீண்டதூரம் ஓடி பந்துவீசுவதற்கு பாகிஸ்தான் பயிற்சியாளர் தடை

(பாகிஸ்தான்)

ஒருநாள் போட்டிகளில் நீண்ட தூரம் ஓடிவந்து பந்து வீசுவதைத் தவிர்க்கவேண்டும் என்று பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளருக்கு, அந்த அணியின் பயிற்சியாளர் பொப் வூல்மர் தடைவிதித்துள்ளார்.

எதிர்வரும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணியின் அதிவேகப் பந்து வீச்சாளரான சொகைப் அக்தரின் ஆக்ரோஷமான ஓட்டத்தை, ரசிகர்கள் பார்க்கமுடியாது. ஏனெனில், ஒருநாள் போட்டிகளில் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் நீண்டதூரம் ஓடிவந்து பந்துவீசுவதைத் தவிர்க்கவேண்டும் என்று, பயிற்சியாளர் வூல்மர் கேட்டுக் கொண்டார்.

லாகூரில் நடைபெற்ற பயிற்சி முகாமின்போது சுமார் ஒருவார காலம் வீரர்களுடன் இருந்த வூல்மர் பந்துவீச்சாளர்களின் 'ரன் - அப்' பைக் குறைக்கும் யோசனைகளைப் பயிற்சி முகாமில் வழங்கினார்.

இந்த விடயத்தில் சொகைப் அக்தர் சிறப்பாகச் செயற்பட்டதாகவும், ஆசிய கிண்ணத்தில் பந்துவீசவர் ஓடிவரும் தூரம் குறைவாக இருக்கும் என்று 'த நியூஸ்' என்ற பாகிஸ்தான் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஒருநாள் போட்டிகள் என்பது துடுப்பாட்ட வீரர்களின் ஆதிக்கம் நிலவக்கூடியது. இதனால், பந்து வீச்சாளர் சக்தியை விரயமாக்காமல் அதைச் சேமிக்க, 'ரன் அப்' பைக் குறைப்பதுதான் சரியான வழியென்று வூல்மர் எண்ணியதாக அணி ஆசிரியர் ஹரூன் ரஷீத் கூறியதாக அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வேகப் பந்துவீச்சாளர் கட்டுப்பாட்டுடன் பந்துவீசி வராததால், பாகிஸ்தான் அணி சமீபகாலமாகப் பெரும் பிரச்சினைகளைச் சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது.

38. எல்லா மாணவர்களும் பரீட்சையில் சித்தியடைந்தனர். சில மாணவர்கள் பெண்களாவர். ஆகவே
(1) சில மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தனர்.
(2) எல்லா மாணவிகளும் பரீட்சையில் சித்தியடையவில்லை.
(3) மாணவர் எவரும் சித்தியடையவில்லை.
(4) எல்லா மாணவிகளும் பரீட்சையில் சித்தியடையத் தவறவில்லை.

39. ராம் போன்ற சிலதலைவர்கள் ஊழல் உள்ளவர்கள்
(1) ராம் ஊழல் இல்லாதவர்
(2) தலைவர்கள் ஊழல் உள்ளவர்கள்
(3) ராம் சில சமயங்களில் ஊழல் இல்லாதவர்
(4) சில தலைவர்கள் ஊழல் உள்ளவர்கள்

40. சில பாடசாலைகள் மாணவர்களுக்கு நல்ல வசதிகளை அளிக்கின்றன. நல்ல வசதிகள் மாணவர்களைப் படிப்பதற்குத் தூண்டுகின்றன.
(1) சில பாடசாலைகள் மாணவர்களை நன்கு படிப்பதற்குத் தூண்டுகின்றன.
(2) சில பாடசாலைகளில் மாணவர்கள் நன்கு படிக்கின்றனர்.
(3) எல்லா பாடசாலைகளும் மாணவர்களை நன்கு படிக்கத் தூண்டுகின்றன.
(4) வசதிகள் உள்ள பாடசாலை மாணவர்கள் நன்கு படிக்கத் தூண்டுகின்றது.

41 தொடக்கம் 45 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையை தெரிவுசெய்க

41. வட்டம் ஒன்றின் ஆரை 20% அதிகரித்தால் பரப்பளவு எத்தனை சதவீதம் அதிகரிக்கும்?
(1) 10% (2) 20% (3) 40% (4) 44%


42. நிரப்பு குழாய் 20 நிமிடத்தில் ஒரு தொட்டியில் நீரை நிரப்பவல்லது வெளியேற்றும் குழாய் 30 நிமிடத்தில் ஓர் தொட்டி நீரை வெளியேற்ற வல்லது. நிரப்பும் குழாய் காலை 10 மணிக்குத் திறக்கப்பட்டு வெளியேற்றும் குழாய் காலை 10 மணி 10 நிமிடத்தில் திறக்கப்பட்டால் எத்தனை மணிக்கு தொட்டி நிரம்பும்?
(1) 10 மணி 30 நிமிடம் (2) 10 மணி 50 நிமிடம்
(3) 10 மணி 40 நிமிடம் (4) 11 மணி


43. ஒரு நகரில் தொலைக்காட்சிப்பெட்டியை 52% ஆனோரும், வானொலிப்பெட்டியை 42% ஆனோரும் இரண்டும் இல்லாதோர் 18% ஆகவும் உள்ளது. தொலைக்காட்சிப் பெட்டியை மட்டும் கொண்டுள்ளோர் எத்தனை சதவீதம்?
(1) 12% (2) 30% (3) 40% (4) 72%


44.1 தொடக்கம் 100 வரையுள்ள எண்களில் 5 என்ற எண் எத்தனை தடவை எழுதப்பட்டிருக்கும்?
(1) 10 (2) 11 (3) 19 (4) 20


45. 1 தொடக்கம் 100 வரையுள்ள எண்களில் 1 என்ற எண் எத்தனை தடவை எழுதப்பட்டிருக்கும்?
(1) 11 (2) 19 (3) 20 (4) 21

46 தொடக்கம் 49 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் புள்ளி அடைப்புக்கள் யாதாயினும் ஓர் எண்கோலத்திற்கு ஏற்ப ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. இக்கோலத்தைக் கண்டு காட்டப்பட்டுள்ள வெற்றிடத்தினுள்ளே இடப்பவேண்டிய திருத்தமான புள்ளி அடைப்பைத் தரப்பட்டுள்ள தெரிவுகளிலிருந்து தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தெரிக.



46.

(1) (2) (3) (4)

47.

(1) (2) (3) (4)

48.

(1) (2) (3) (4)

49.

(1) (2) (3) (4)

# க.பொ.த சாதாரண தரம்
# கணிதம்

1. 40 ஆணிகளின் நிறை 1 kg ஆகும். ஒரு பெட்டி செய்வதற்கு 24 ஆணிகள் தேவை. அவ்வாறான 10 பெட்டிகள் செய்வதற்கு எத்தனை kg ஆணிகள் தேவை?
2. சுருக்குக. $8^{-2/3} \times 8^{1/3}$
3. $\log_{10} m = a$, $\log_{10} n = b$ எனின் $\log_{10} m^2 n$ ஐ a, b இல் தருக
4. தீர்க்க. $Y/2+2Y=11$
5. 6 மாணவர்களின் நிறையின் இடை 25 kg. அதில் 5 மாணவர்களின் நிறையின் இடை 24.2kg ஆயின் 6 ஆவது மாணவனின் நிறை யாது?
6. ஒரு பொருள் 5% நட்டத்துடன் 475/= இற்கு விற்கும் ஒருவன் 5% இலாபம் பெற என்ன விலைக்கு விற்கவேண்டும்?
7. a=3, b=-2, c=5 எனின்
i. 2b2-a ii. c(a-b)
8. சுருக்குக. $\frac{5}{x-y} - \frac{3}{y-x}$
9. a/b=4/7 எனின் $\frac{a+b}{b}$ இன் பெறுமதி யாது?
10. 3இற்கும் 275 இற்கும் இடையே இரு பெருக்கல் இடையைக் காண்க.
11. ஒரு வியாபாரி 15/= பங்குகளை 18/= வீதம் வாங்குவதற்கு 36000/= முதலீடு செய்தார்.
i. வாங்கிய பங்குகள் எத்தனை
ii. பெயர் மதிப்பின் பெறுமானம் யாது?
12. 5/9 (1/3 இன் 2 1/3) சுருக்குக.
13. $\sqrt{3} = 1.732$ எனின் $\sqrt{147}$ இன் பெறுமானம் யாது?
14. x+y=4, 2x-4y=17 தீர்க்காது (x-y) இன் பெறுமதி யாது?
15. பல்கோணி ஒன்றின் அகக்கோணத்துக்கும், புறக்கோணத்துக்கும் இடையேயுள்ள விகிதம் 4:1 எனின் பக்க எண்ணிக்கை யாது?
16. காரணிப்படுத்துக. $9xy^2 - x^3$
17. $20x^2-15x=0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்க
18. வட்டத்தின் மையத்திலிருந்து 5cm தூரத்தில் உள்ள நாணின் நீளம் 24 cm எனின் வட்டத்தின் ஆரையைக் காண்க?
19. $2\log_{10}5 + \log_{10}4 + 1/2 \log_{10}25$ ஐச் சுருக்குக.
20. $\frac{1-0.09}{0.8+0.6}$ சுருக்குக
21.

△ PQR இன் பரப்பளவு யாது?
22.

X ஐக் காண்க
23. (2x+3y) இன் இரண்டு மடங்கை (x-2y) இன் மூன்று மடங்கிலிருந்து கழிக்க.
24. $V=4/3\pi r^3$ என்பதில் r ஐ எழுவாயாக மாற்றுக.
25. ஒரு வீட்டின் காலாண்டு வரி 150/= அந்த வீட்டின் ஆண்டுப் பெறுமானம் 6000/= எனின், வரிவீதம் யாது?
26. $30.5^2-29.5^2$ காரணி மூலம் சுருக்குக.
27. (3x-2y) (x+y) இன் பெருக்கம் யாது?
28. 5, 8, 11 என்ற தொடரின் 19 ஆம் உறுப்பு யாது?
29. $11101_2 + 1011_2 - 10010_2$
30. 15, 60, 30 இன் பொ.கா.பெ. யாது?

B.Siva

இங்கே மடிக்கவும்





மாணவர் மலர்


## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

இல. 01 முதல் 03 வரை கோடிடப்பட்ட சொல்லின் ஒத்த சொல்லைத் தெரிந்து சரியான விடையின் கீழ் கோடிடுக.


1. எல்லா இடையூறுகளையும் தாண்டி அவன் முன்னேறினான்.
(மகிழ்ச்சி, ஆனந்தம், துன்பம், சந்தோசம்)
2. சில மாணவர்கள் படிப்பில் சோர்வு காட்டுகின்றனர்.
(இக்கரை, சுறுசுறுப்பின்மை, சோம்பல், சுறுசுறுப்பு)
3. அவன் கால்நடைகளை வைத்துமேய்த்துக் கொண்டிருந்தான்.
(கோழி சேவல்கள், ஆடு மாடு, மான் மரைகள், புலி - சிங்கங்கள்)
4. காந்தத்தின் செறிவு கூடிய பகுதி எது?
(ஓரங்கள், முனைகள், எல்லாப் பாகமும், நடுப்பாகம்)
5. நலிந்த தண்டுடைய தாவரம் எது?
(வேம்பு, தென்னை, சூரியகாந்தி, கத்தாப்பு)

இல. 06 முதல் 10 வரையுள்ள 'அ' பகுதிக்குப் பொருத்தமான விடையை 'ஆ' பகுதியிலிருந்து தெரிவுசெய்து அதன் இலக்கத்தை வெற்றுக் கூட்டில் எழுதுக.


| அ | | ஆ |
|---|---|---|
| 6. எரிபொருள் சக்திசிக்கரிப்பு நிலையம் | ☐ | 1. அநுராதபுரம் |
| 7. இலங்கையில் வெளியாகும் ஒரு தினசரி | ☐ | 2. சப்புகஸ்கந்த |
| 8. எமது நாட்டின் முதலாவது இராசதானி | ☐ | 3. தினகரன் |
| 9. புற்றுநோய் வைத்தியசாலை அமைந்துள்ள இடம் | ☐ | 4. சிங்கராயக் காடு |
| 10. இலங்கையின் பிரதான தேசியவனம் | ☐ | 5. மகரகம |


11.

அருகில் தரப்பட்ட உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

ஒரே தடவையில் இரண்டு மின்குமிழ்களை ஒளிரச் செய்யும் முறையைக் கீழுள்ள உரு காட்டுகின்றது. இதைப் பயன்படுத்திக் கீழே கேட்கப்படும் வினாக்களுக்குரிய விடையை இல. 12 முதல் 16 வரை எழுதுக.



12. A குறிக்கும் பொருளின் பெயரென்ன?
13. மின் குமிழ்கள் ஒளிர்ந்தனவா? ஒளிவரவில்லை?
14. மின்குமிழைக் கண்டுபிடித்தவர் யார்?
15. மின்குமிழ் சமாந்தர நிலையிலா, தொடர் நிலையிலா காணப்படுகின்றது?
16. மின்குமிழை மின்கலத்துடன் இணைக்கப்பயன்படுவது எது?

17.

இவ்வுருவத்தில் இருந்து எத்தனை முக்கோணிகளைப் பெறலாம்?

18.

(1) (2) (3)

மேலுள்ள கோலம் போன்று தொடர்ந்து செல்லும் போது ஆறாவது கோலத்தில் உள்ள புள்ளிகளின் எண்ணிக்கை யாது? (சரியான விடையின் கீழ் கோடிடுக)
(1) 30 (2) 28 (3) 24 (4) 42

19. ஒரு கூட்டில் 15 மஞ்சல் வர்ணக் குருவிகளும் 17 நீல வர்ணக் குருவிகளும் சில பச்சைக் குருவிகளும் இருந்தன. அங்கு பச்சை வர்ணக் குருவிகளின் எண்ணிக்கை மஞ்சள் வர்ணக் குருவிகளை விட கூடுதலாகவும் நீல வர்ணக் குருவிகளை விடக் குறைவாகவும் இருந்தன. எனின் கூட்டிலிருந்த குருவிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

20. நீலம், சிவப்பு, மஞ்சள் எனும் கொடிகள் முறையே மாறிமாறிக் கட்டப்பட்டுள்ள ஒரு கொடிக் கயிற்றில் முதலாவது கொடியின் நிறம் நீலம் ஆகும். 79 ஆவது கொடியின் நிறம் யாது?


இல. 21 முதல் 25 வரையுள்ள வினாக்களில் பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையைக் கீழுள்ள நான்கு சொற்களிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

21. ஒளியுக் கூடிய தோலுடைய விலங்கு
(1) மண்புழு (2) ஓணான் (3) மனிதன் (4) நத்தை
22. பாதுகாப்பற்ற உணவு, நீர் காரணமாக ஏற்படாத நோய்
(1) கொலரா (2) போலியோ (3) வயிற்றோட்டம் (4) தைபோயிட்
23. தலைகீழாகத் தொங்கிக் கொண்டு உறங்குவது எது?
(1) ஆந்தை (2) வெளவால் (3) குயில் (4) கிக்கோழி
24. சூரியனைச் சுற்றியுள்ள ஒன்பது கோள்களுள் மிகச் சிறிய கிரகம் எது?
(1) வியாழன் (2) சனி (3) புதன் (4) சுக்கிரன்
25. இஸ்லாமியரின் புனித நூல் எது?
(1) திரிபிடகம் (2) திருக்குர் ஆன்
(3) வேத சிவாகமம் (4) பைபிள்

இல 26 முதல் 30 வரை சரியாயின் (√) எனவும், பிழையாயின் (X) எனவும் அடையாளம் இடுக.

26. கிளி ஒன்றின் மாதிரி உருவத்தைச் செய்வதற்கு மிகப் பொருத்தமான மூலப்பொருள் குருத்தோலை ஆகும். ( )
27. ஒரு பதிவு செய்யப்பட்ட கடிதத்தை அஞ்சலில் இடுவதற்கு ரூபா 16.50 சத முத்திரையை ஒட்டுதல் வேண்டும். ( )
28. பூமியா உரத்தில் பொசுபரசு அதிகளவில் அடங்கியுள்ளது. ( )
29. எண்பதாவது ஆண்டு முடிவில் கொண்டாடப்படுவது பவள விழாவாகும். ( )
30. இலங்கையின் தேசியப் பறவை அன்னமாகும். ( )

ஒரு வியாபாரி 5 நாட்களில் விற்ற பாலின் அளவு தொடர்பான வரைபு கீழே தரப்பட்டுள்ளது. இந்த வரைபின் உதவியுடன் 31 - 35 வரையான வினாக்களுக்கு விடை தருக.




31. திங்கட்கிழமை விற்றபாலின் அளவு எவ்வளவு? (.....லீற்றர்)

32. ஞாயிறு, திங்கள் விற்றபாலின் மொத்த அளவு எவ்வளவு? (....லீற்றர்)

33.. சமமான பால் விற்பனை செய்யப்பட்ட நாட்கள் எவை? (.........)

34. ஐந்து நாட்களும் விற்ற பாலின் மொத்த அளவு யாது? (....லீற்றர்)

35. ஒரு லீற்றர் பாலின் விலை ரூபா 30 எனின், செவ்வாய்க்கிழமை விற்ற பாலினால் கிடைக்கும் வருமானம் யாது? (.........)


இல 36 முதல் 40 வரையுள்ள வினாக்களில் முதல் உருவுடன் கருத்து நிறைந்த தொடர்புள்ள உருவைப் பின்னர் உள்ள நான்கு உருக்களிலிருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

36.



(1) (2) (3) (4)

37.




(1) (2) (3) (4)

38




(1) (2) (3) (4)

39.




(1) (2) (3) (4)

40.



(1) (2) (3) (4)


41. கீழே தரப்பட்டுள்ள படங்களானவை சூரியன் உதித்தலையும், மறைதலையும் காண்பிக்கின்றன. இந்தப் படங்களில் சூரியன் காணப்படும் நிலையை நேரத்துடன் ஒப்பிடும்போது, சரியாக அமையும் விடை எது?



1) பி.ப. 6.00 மணி, பி.ப. 3.00 மணி, பகல் 12.00 மணி, மு.ப. 9.00 மணி, மு.ப. 6.00 மணி
2) மு.ப. 6.00 மணி, மு.ப. 9.00 மணி, பகல் 12.00 மணி, பி.ப. 3.00 மணி, பி.ப. 6.00 மணி
3) மு.ப. 6.00 மணி, பி.ப. 3.00 மணி, பகல் 12.00 மணி, மு.ப. 9.00 மணி, மு.ப. 6.00 மணி

42. கீழ்வரும் சேர்மானங்களில் தவறானது

(1) (2) (3)



43. கீழே உள்ள செயற்பாடுகளில் வித்தியாசமானது எது?

(1) (2) (3)



(.........)

44.

| | |
|---|---|
| ▲ | = 10 |
| ● | = 20 |
| ■ | = 30 |

அருகே தரப்பட்டுள்ள தரவின்படி ▲ + ▲ + என்பதன் பெறுமானத்துக்கு சமபெறுமதியுடையது.

(1) ▲ + ■ (2) ▲ + ● (3) ■ + ●

45. கீழ்வருவனவற்றுள் அதிதாகப் பெறத்தக்க பொருள் எது?
(1) முயற்கொம்பு (2) ஆமை உரோமம் (3) புலிநெய்

46. இரண்டு மாணவரிடையே நடைபெற்ற கீழ்வரும் உரையாடலை அவதானித்து விளங்கிக்கொள்க.

நந்து: - நான் இம்முறை புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவில்லை. மிகவும் கவனமாகப் படித்து அடுத்த ஆண்டு பரீட்சை எழுதப்போகிறேன்.

சுந்து: - இல்லை நந்து நீங்கள் சொல்வது தவறு. புலமைப் பரிசில் பரீட்சைக்கு அடுத்த ஆண்டு தோற்ற முடியாது. நீங்கள் கவனமாகப் படித்தால் சித்தியடையலாம்.

நந்து: - அப்படியா?

சுந்து: - ஆம்! ஆனால் கணித வினாத்தாள் மட்டுமே கடினமானது. அதைக் கவனமாகப் படித்தால் இலகுவாக சித்தியடையலாம்.

47. இவ்வுரையாடலின்படி மிகவும் சரியான விடையைத் தெரிவு செய்க.
(1) நந்து தரம் 5 மாணவன் (2) சுந்து தரம் 5 மாணவன்
(3) இருவரும் தரம் மாணவர்கள் (.............)

48. இவர்கள் உரையாடலில் சரியான கருத்தை வெளிப்படுத்தும் கூற்றும் அதைக் கூறியவர் பெயரும் -
(1) கணித வினாத்தாள் கடினமானது - சுந்து
(2) புலமைப் பரிசில் பரீட்சைக்கு எப்போதும் தோற்றலாம் -சுந்து
(3) புலமைப் பரிசில் பரீட்சை ஒரு தடவை மட்டுமே நடைபெறும் -சுந்து

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்


# ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை– 2004 மாதிரி வினாத்தாள்

## பொது உளச்சார்பு

தொகுப்பு - தவசேகர் B.Sc


(சென்றவாரத் தொடர்ச்சி...)

15. வெற்றிடத்தில் வரவேண்டிய எண் யாது?




(1) 84 (2)63.5 (3)26 (4)83

16 தொடக்கம் 19 வரையான வினாக்கள் கீழே தரப்பட்ட உருவை அடிப்படையாகக் கொண்டவை. உருவில் எண்கள் ஏதோவொரு கோலத்திற்கேற்ப அமைந்துள்ளது.




16. A இல் வரவேண்டிய எண்
(1)6 (2)11 (3)14 (4)10

17. B இல் வரவேண்டிய எண்
(1) 8 (2)200 (3)220 (4)525

18. C இல் வரவேண்டிய எண்
(1)1131 (2)1162 (3)625 (4)825

19. D இல் வரவேண்டிய எண்
(1)2215 (2)4125 (3)3125 (4)6786

20 தொடக்கம் 24 வரையான வினாக்கள் பின்வரும் தகவலை அடிப்படையாகக் கொண்டவை

ஆண்களும் பெண்களும் உள்ள ஒரு வகுப்பில் பரீட்சை முடிவுகளின் பின் சீதாவின் நிலை ஆறாவதாகவும், இராமன் பன்னிரண்டாவதாகவும் உள்ளனர். அந்த வகுப்பிலுள்ள பெண் பிள்ளைகளுள் சீதா நான்காவதாகவும், பின்னிருந்து பதினாறாவ தாகவும் உள்ளாள். இராமன் முன்னிருந்து 7 ஆவதாகவும் பின்னிருந்து 22 ஆவதாகவும் உள்ளான். இதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

20. சீதாவுக்கு முன்னுள்ள ஆண்கள் எத்தனை பேர்?
(1)3 (2)2 (3)4 (4)5

21. சீதாவுக்கும் இராமனுக்கும் இடையேயுள்ள பெண்கள் எத்தனை பேர்?
(1)1 (2)2 (3)5 (4)11

22. வகுப்பிலுள்ள மொத்த ஆண்கள் எத்தனை பேர்?
(1)26 (2)27 (3)28 (4)34

23. வகுப்பிலுள்ளோரின் மொத்த எண்ணிக்கை யாது?
(1) 29 (2)46 (3)47 (4)48

24. இராமனுக்குப் பின்னிருக்கும் பெண்கள் எத்தனை பேர்?
(1)14 (2)15 (3)16 (4)17

25 தொடக்கம் 30 வரையான வினாக்கள் இரகசியக் குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டவை. கீழே தரப்பட்ட பதில்களுக்குரிய இரகசியக் குறியீட்டுத் தொகுதியைத் தெரிவுசெய்க?

(1) AXOSN (2)WXYSZ (3)YMASZ
(4)ACQSB (5)OBPQN (6)ABCMN

25. கண்டனம் (...............) (1) 1 (2) 4 (3)5 (4)6
26. கடலரண் (...............) (1) 3 (2) 4 (3)5 (4)6
27. தண்டுலம் (...............) (1) 3 (2) 4 (3)5 (4)6
28. சந்திரன் (...............) (1) 1 (2) 2 (3) 3 (4) 4
29. தினகரன் (...............) (1) 1 (2) 2 (3) 3 (4) 4
30. கந்தரம் (...............) (1) 1 (2) 2 (3) 3 (4) 4

31 தொடக்கம் 35 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் மூன்று சமன்பாடுகள் தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றிலும்*எனும் குறியீடுகள் குறித்த கணிதச் செய்கை ஒன்றைக் குறிக்கின்றன. A,B,C ஆகிய எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஓர் எண்ணை குறிப்பிடுகின்றன. (எல்லா வினாக்களிலும் ஒரே மாதிரி இருக்க வேண்டியதில்லை) மூன்று சமன்பாடுகளையும் பரிசீலித்து ஒவ்வொரு வினாவிலும் மூன்றாம் சமன்பாட்டிலே □ இனால் காட்டப்படும் வெற்றுக்கூட்டுக்குள்ளே இடவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

31. $24*3+5=13$
$32 \div 8*A=2$
$9-A*2=\square$ (1) 7/2 (2) 8 (3)14 (4)10

32. $15*3-8=37$
$8+12.4=11$
$4*10.5=\square$ (1)42 (2) 200 (3)45 (4)8

33. $A*5+8=14$
$17-(B*4)=3$
$(AxB)+6=\square$ (1)11 (2) 17 (3)61 (4)66

34. $(42-C).1/3=8$
$5/6.(C-6)=10$
$1/4x(C+6)=\square$ (1)8 (2)4 (3)5 (4)6

35. $3/5+(1/10*2/A)=4/5$
$(4/5*4/A)-1/3=2/3$
$A*5-8=\square$ (1)-7 (2)17 (3)92 (4)2

36 - 40 வரையான வினாக்களில் ஒரு கூற்றும் அதனைத் தொடர்ந்து அந்தக் கூற்றுத் தொடர்பான நான்கு விளக்கமும் தரப்படுகின்றன. எந்த விளக்கம் கூற்றின் கருத்தை உட்கிடையாகக் கொண்டுள்ளது என்பதைக் குறித்து நிற்கும் இலக்கத்தை தெரிக.

36. எல்லா அலுவலகங்களும் சனிக்கிழமைகளில் பூட்டப்பட வேண்டும் ராஜா ஒரு அலுவலக சிற்றூழியர்
(1) இராஜா இன்று வேலைக்குப் போகமாட்டார்.
(2) சனிக்கிழமைகளில் இராஜா வேலைக்குப் போவார்
(3) ராஜா ஒரு அரசாங்க அலுவலகத்தின் சிற்றூழியர்.
(4) ராஜா சனிக்கிழமைகளில் அலுவலகத்துக்குச் செல்வதில்லை.

37. நான் நேற்று வாசித்த புத்தகம் மிக நல்லது
(1) நான் வாசித்த ஏனைய புத்தகங்கள் நல்லதல்ல.
(2) நான் வாசித்த புத்தகங்களுள் ஆகச்சிறந்தது நேற்று நான் வாசித்த புத்தகமே.
(3) நான் வாசித்திருந்த புத்தகங்களில் சில இதைப்போல் நல்ல தல்ல.
(4) நான் நேற்று வாசித்த புத்தகமே புத்தகங்களுள் சிறந்தது.

இங்கே மடிக்கவும்

# பழுதடைந்த வாகனங்களைச் செலுத்துவோர் மீது பொலிஸாரின் உதவியுடன் கடும் நடவடிக்கை!

## மோட்டார் போக்குவரத்து பரிசோதகர் தெரிவிப்பு

பழுதடைந்த வாகனங்களை பிரதான வீதிகளில் செலுத்தி பொதுமக்களுக்குச் சிரமம் கொடுப்போர்மீது பொலிஸாரின் உதவியுடன் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என, யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து பரிசோதகர் குலாஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

யாழ்ப்பாண மாவட்டத்தில் வீதிகளில் பயணிக்கும் பல வாகனங்கள் பாவனைக்கு உதவாததாக இருப்பதனைக் காணமுடிகிறது. அவற்றால் பெருஞ்சிரமங்களை மக்கள் அனுபவிக்கின்றனர். பயணிகள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் தனியார் மினிபஸ்கள், கார்கள், ஓட்டோக்கள் முதலானவற்றில் அந்தந்தச் சங்கங்கள் கவனமெடுத்து அவற்றைப் பரிசோதித்து சேவையில் ஈடுபட அனுமதிக்கவேண்டும்.

இதனைவிட தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கங்களில் பதியப்படாமல் பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் பழுதடைந்த நிலையில் உள்ள. வாகனங்கள் என்பன பொலிஸாரின் உதவியோடு கைப்பற்றப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளன. இததகைய - பழுதடைந்த நிலையில் எந்தவித சைகை விளக்குகளையோ, வாகனப் பயணங்களை வீதிகளில் அவதானிக்கும் பக்கக் கண்ணாடிகளையோ கொண்டிராத வாகனங்களால் பல்வேறு விபத்துக்களும் ஆபத்துக்களும் இடம்பெற வாய்ப்பிருக் கின்றன.

அவற்றைத் தடுக்க சகல முயற்சிகளையும் மேற்கொள்ளவுள்ளோம். இதனைவிட பழுதடைந்த நிலையில் உள்ள வாகனஙகள் வெளியேற்றும் அளவுக்கதிகமான புகையால் பொதுமக்களின் சுகாதாரத்திற்கும் அதிகமான பாதிப்பு ஏற்படுத்துகிறது. இத்தகைய வாகனங்கள் பிரதான வீதிகளில் பயணிப்பதைத் தவிர்க்கவேண்டும்.

இதேவேளை இன்னுமோர் விடயத்தையும் கூறிவைக்க விருமபுகிறேன். புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வோர் நம்பிக்கையானவர்களிட.மிருந்தே வாகனங்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியும். குறிப்பாக அண்மைக்காலங்களில் சில புதிய வாகனங்கள்கூட தவறான பதிவிலக்கங்களைக் கொண்டிருக்கின்றமை கண்டுபிடிககப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# அகதிகளுக்கான உதவிகளை வழங்க ஐ.எம்.ஓ நிறுவனம் யாழ்ப்பாணத்திலும்

(நெடுந்தீவு)

இந்தியாவிலிருந்து திரும்பும் இலங்கை அகதிகளுக்கான உதவி வழங்கும் வகையிலே 'புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனம்' (IMO) தற்போது இலங்கையிலும் தமது நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

சொந்த நாட்டில் ஒரு புதிய வாழ்வை ஆரம்பிப்பதற்கான உதவிகளை வழங்குவதும், நீண்ட காலத்துக்கு முன் பிரிந்துசென்ற உறவுகளை மீளச்சேர்ப்பதற்கு உதவுவதுமே இந்த நிறுவனத்தின் நோக்கமாகும்.

இதேவேளை இந்தியாவிலிருந்து மீளக்குடியமரவரும் குடும்பங்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்வதற்குப் போக்குவரத்து உதவி, உலருணவு அற்ற நிவாரணப் பொதி வழங்கல், இலவச மருத்துவப் பரிசோதனை, உளநல ஆலோசனை வழங்கல் மற்றும் ஜீவனோபாயத்தை விருத்திசெய்வதற்கான உதவி, தொழில் வாய்ப்புக்கான தொடர்புகளை ஏற்படுத்தல் போன்ற உதவிகளை இந்த நிறுவனம் மேற்கொள்ள ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் இந்த நிறுவனத்துக்கு - மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கிளை ,அலுவலகங்கள் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

### கிணறுகளுக்குக் குளோரின்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கிணறுகளுக்கு குளோரின் தூவிச் சுத்திகரிக்கும் பணிகள் அடுத்தவாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான செயற்பாடுகள் இந்தப்பகுதிப் பொதுச் சுகாதார உத்தியோகததர்கள் ஊடாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் நல்லூர் பிரதேச சபையினர் ஈடுபட்டுவருகின்றனர். (லெ)

# பன்றிகளின் தொல்லை; பயிர்கள் அழிந்து நாசம்!

## அளவெட்டி விவசாயிகள் கவலை

பன்றிகளின் தொல்லையினால் பயிர்ச்செய்கை பாதிக்கப்படுவதாக அளவெட்டிப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். இரவுவேளைகளில் கூட்டமாகவரும் பன்றிகள் மரவள்ளி, வெங்காயம் போன்ற பயிர்களை அழித்து சேதப்படுத்துவதாகவும், இதனால் பெரும் நஷ்டமடையவேண்டி ஏற்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

பகல் வேளைகளில் இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள்ளும், கைவிடப்பட்ட காணிகளில் வளர்ந்துள்ள பற்றைகளிலும் இந்தப் பன்றிகள் ஒளிந்துள்ளன. சிலவேளைகளில் பகல்நேரங்களிலும் இவற்றின் நடமாட்டத்தை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவற்றைத் துரத்தமுயலும் விவசாயிகளை பன்றிகள் திருப்பித் தாக்குவதாகவும், இதனால் அச்சமடையும் விவசாயிகள் பன்றிகளைத் துரத்த முயற்சிப்பதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அறுவடை நிலையை அடைந்துள்ள மரவள்ளி, வெங்காயம் போன்றவற்றை இவை அழித்து சேதப்படுத்துகின்றன. எனவே பன்றிகளைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாய கமநல கேந்திர நிலையம் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்தவிடயம் தொடர்பாக அந்தப்பகுதி விவசாய சம்மேளனங்களினால் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உட்பட பல விவசாய அமைப்புக்களிடம் முறையிடப்பட்டும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையென சுட்டிக்காட்டப்படுகிறது. (94)

# கலைஞர்கள் சங்கமிக்கும் பாரம்பரிய கலைவிழா!

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டிய மாபெரும் கலைவிழா எதிர்வரும் 16, 17, 18 ஆகிய திகதிகளில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இநதக் கலைநிகழ்வுகளில் மூத்த கலைஞர்கள் 19 பேர் கௌரவிக்கப்படவுள்ளதுடன், கழகம் நடத்திய இசை, நாடக கிராமிய நடனப் போட்டிகளில் வெற்றிபெற்ற கலைஞர்கள், நாடக மன்றங்கள், பாடசாலைகளுக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

18 ஆம் திகதியன்று நடைபெறும் இறுதிநாள் நிகழ்வில் கிராமியக் கலை ஊர்வலம் நடைபெறவுள்ளது. இந்த ஊர்வலம் சட்டநாதர் கோவில் முன்றலில் இருந்து ஆரம்பமாகி நல்லூர் கந்தசுவாமி கோவிலை வந்தடையும்.

இதில் கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், குதிரையாட்டம், தவில், நாதஸ்வரம், உடுக்கு என்பவற்றுடன் மற்றும் பல கிராமிய நடனங்களும் இடம்பெறும்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வரும் பாரம்பரிய கலைஞர்கள் சங்கமமாகும் இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியற்துறையினர், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், திணைக்களம் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள், கலை ஆர்வலர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் கடந்தமாதம் நடத்தப்பட்ட பாரம்பரிய நாடக, கலைப் போட்டிகளில் வெற்றிபெற்ற நிகழ்வுகளும் மேடையேற்றப்படவுள்ள்தாக கழகச் செயலாளர் செ.மெற்றாஸ் மயில் தெரிவித்தார்.

# சமுத்திராதேவி படகு நீர்கொழும்புக்குச் சென்றது

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் படகான 'சமுத்திராதேவி' நேற்று முன்தினம் காலை திருத்த வேலைகளுக்காக நீர்கொழும்புக்கு இழுத்துச் செல்லப்பட்டது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மற்றைய படகான உதயதாரகையினால் கட்டி இழுக்கப்பட்டு, நேற்றுமுன்தினம் காலை கொண்டு செல்லப்பட்டது.

இந்தப் படகினை மன்னாப் பகுதியில் வைத்து இன்னொரு படகு நீர்கொழும்புக்கு இழுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால், உதயதாரகை படகு மன்னாரிலிருந்து மீண்டும் நெடுந்தீவுக்குத் திரும்பி விடும்.


புதிய இயந்திரம் பொருத்துதல், உடற்கோப்பில் மாற்றம் செய்தல் என்பன தொடர்பாகவே இந்தப் படகு நீர்கொழும்புக்கு எடுத்துச் செல்லப் படுவது குறிப்பிடத்தக்கதாகும். (113)

### ஜனசக்தி முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மயிலணி ஜனசக்தி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஜனசக்தி முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி பெற்றோர் சங்கத் தலைவி கௌரி ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் எஸ்.ஜெயராஜ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.



மக்கள் நலன்புரிச் சங்கம் நடத்திய மகளிர் படையணிகளுக்கான பயிற்சிப் பாசறையை நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (111)

# சின்னஞ்சிறு செய்திகள்

### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படும் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

இன்றுமுதல் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக நல்லூர் பிரதேசசபை செயலாளர் தெரிவித்தார். இதேசமயம் இந்தப் பிரதேசத்துக்குட்பட்ட இடங்களில் காணப்படும் கட்டாக்காலி ஆடு மற்றும் மாடுகளும் நல்லூர் பிரதேச சபையினால் பிடிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (லெ)

### விலை நிர்ணயம் தொடர்பான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

விலை நிர்ணயக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கட்டட நிர்மாண வேலைகளுக்கான பொருட்களுக்கான விலை நிர்ணயம் உட்பட பல்வேறு பொருட்களுக்கான விலை நிர்ணயம் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

### ஓவியக் கண்காட்சி

இலங்கைத் தமிழ் ஓவியர்களான கமலா - வாசுகி கிக்கோ (ருசாந்தன்) ஆகியோரின் 'வெளி வாழ்க்கை கோடு' எனும் தலைப்பிலான ஓவியக் கண்காட்சி எதிர்வரும் 16 ஆம் திகதி கொழும்பு - 07 இல் உள்ள ஹரோல்ட் பீரிஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி நிகழ்வை இலங்கைக்கான சுவிஸ் நாட்டுத் தூதுவர் பெர்ணாடினோ ரெகாஸோனி சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைப்பார். இந்த ஓவியக் கண்காட்சி தொடர்ந்து எதிர்வரும் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு ரோக்கிர்ன் நிலையத்திலும் நடைபெறவுள்ளன.

### தமிழ் பெயர்களிலும் கணக்குகளை ஆரம்பிக்க நடவடிக்கை

மக்கள் வங்கிகளில் நடைமுறைப் படுத்தப்படும் சிங்களப் பெயர்களிலான சேமிப்புத் திட்டங்களைப் போல - அதாவது ஜயநிவச, இசுறு உதான, ஜயஸ்ரீ போன்ற பெயரினைப்போல தமிழ்ப் பெயர்களில் சேமிப்புத் திட்டங்களை நடைமுறைப் படுத்த வடபிரதேச பிராந்திய முகாமையாளர் க.சிவபாதவிருதயர் நடவடிக்கை எடுத்துவருகிறார். (29)

### பச்சிலைப்பள்ளி மக்களுக்கு வீடமைப்புக்கடன்

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் கடந்தகால யுத்த நடவடிக்கைகள் காரணமாகச் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கு வடக்கு - கிழக்கு வீடமைப்பு அதிகார சபை கடன் வழங்கவுள்ளது.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் வீடு, பகுதியாகச் சேதமடைந்தவர்கள் 75 ஆயிரம் ரூபாவையும் முழுமையாகச் சேதமடைந்தவர்கள் ஒருலட்சத்து 60 ஆயிரம் ரூபாவையும் கடனாகப் பெறமுடியும்.

எனவே வீடுகள் சேதமடைந்தவர்கள் பளைப்பிரதேச செயலகத்துடன் தொடர்புகொண்டு இந்தக் கடன்களைப் பெறமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (122)

### ஆக்கத்திறன் கண்காட்சி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவரது ஆக்கத்திறனை வெளிக்கொண்டு வரும் வலயமட்ட ஆக்கத்திறன் கண்காடசி எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டக் கண்காட்சியில் தெரிவுசெய்யப்படும் பொருட்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கண்காட்சியைத் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் ஆரம்பித்துவைப்பார். (24)

### முள்ளியான் மருந்தகத்தை மாற்றுமாறு கோரிக்கை

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்கு - முள்ளியான் மத்திய மருந்தகத்தை, மக்கள் செறிந்துவாழும் பகுதியில் அமைக்குமாறு முள்ளியான் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நித்தியவேட்டையில் அமைந்திருந்த இந்த மருந்தகம் கடந்தகால போர் அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைந்துள்ளது. இந்த மருந்தகத்தைப் புனரமைப்பதற்குரிய ஆரம்பகட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. (122)

# கஜேந்திரன் எம்.பி மருதங்கேணிக்கு விஜயம்

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் வடமராட்சி கிழக்கின் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளுக்கும்சென்று, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து உடனடியாகச் செய்யப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகள் பற்றியும் கலந்துரையாடினார்.

அண்மையில் கட்டைக்காடு கிராமத்துக்குச் சென்ற அவர் அங்குள்ள பாடசாலை அதிபரிடம் பாடசாலை அபிவிருத்தி பற்றிக் கலந்துரையாடினார்.

அந்தக் கிராமமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க வாரத்தில் இரு தினங்கள் மருதங்கேணி வைத்தியசாலையில் நடமாடும் சேவையை நடத்துவதற்கு மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுத்தருவதாகக் கூறினார். (122)

அரசியல்

அன்ரன் அன்பழகன்

# சரியான முறையில் அமைந்த புரிந்துணர்வே நிலையான சமாதானத்தின் திறவுகோல்...

புரிந்துணர்வு ஒப்பந்தம் சரியான முறையில் தொடர்ந்தும் கடைப்பிடிக் கப்பட்டிருந்தால், யுத்தம் கொழும் பின் வாசலை எட்டியிருக்கமாட்டாது என்கிறார. ஐக்கிய தேசிய முன்னணி யின நாடாளுமன்ற உறுப்பினர் கலா நிதி ராஜித சேனாரத்ன.

ரணில் விக்கிரமசிங்க, பிரபா கரன் கைச்சாத்திட்டிருந்த புரிந்து ணர்வு ஒப்பந்தமே இலங்கைத் தீவின இருபது வருட இரத்தம் சிந்துகையை முடிவுக்குக் கொண்டுவந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அச்சாணி யாகும் என்பதை மறந்துவிட்ட சந் திரிகா - ஜே.வி.பி கூட்டு புரிந்து ணர்வு உடன்படிக்கையின் கருத்துக் களை புறந்தள்ளியதனாலேயே இன் றைய நெருக்கடி நிலைமை தோன்றி யுள்ளது என்றார் அவர்.


விகாரையில் பயங்கர ஆயுதங் களுடன் கைதுசெய்யப்பட்டவர்கள் வெறும் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் பிணையில் வெளியே விடப் படுகிறார்கள் என்றால் இன்றைய அரசு நீதித்துறையை எப்படித் தன் கைகளுக்கு அரசியல் இலாபம் கரு திக்கொண்டு வந்துவிட்டது என்பதற்கு வேறு சாட்சியங்கள் எதுவும் தேவை யில்லை, புலிகளின் அகமுரண்பா டுகளுக்குள் தலையிட்டு அதிலி ருந்து தனது அரசியல் இலாபங் களுக்கான நடவடிக்கைகளை மேற் கொள்வதால் புரிந்துணர்வு ஒப்பந் தம் வலுவிழந்து போகிறது. கருணா என்கின்ற மற்றும் ஒரு யுத்த வியா பாரியை உருவாக்குவதால் இனப் பிரச்சினைக்கான அரசியற்தீர்வு மேலும் சிக்கலடைவதைத் தவிர வேறு எதுவும் நிகழப்போவதில்லை.

சமாதானம் என்கின்ற சொல்லின் அர்த்தம் இலங்கையின் இரு இனத் தின் இடையேயும், வேறு வேறு அர்த் தங்களைக் கொடுக்கும் கருதுகோள் களாக மாறிவிட்டன. தமிழர்களைப் பொறுத்தவரை கௌரவத்துடன் கூடிய ஒரு சமத்துவமான (Equality with dignity) வாழ்வை எதிர் பார்த்திருக்கின்றனர்.

அதன் அடிப்படையிலேயே தமி ழர் ஒரு தனித்துவமான தேசிய இன மாக அங்கீகரிக்கப்படுவதை அதா வது தமது மொழி, கலை, பண்பாடு என்பவற்றுக்கான தனித்துவமான அங்கீகாரத்தையும், வடக்கு கிழக்கை தமிழர் தாயகமாக அங்கீகரிக்கப்படுவ தையும் எதிர்பார்த்து சமஷ்டி முறை யில் அமைந்த அதிகாரப் பகிர்வின் அரசியலமைப்பை எதிர்பார்க்கின்ற னர். தமிழர தாயகக குடிப்பரம்பலுக்கு 1881 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டையும், பிரித்தானியாவிடமி ருந்து சுதந்திரம்பெற்ற பின் வரை யப்பட்ட புதிய தேர்தல் தொகுதி கள் மற்றும் மாவட்டங்களின் மீள் எல்லை வரைபுகள் போன்றவை யுமே சாட்சியமாகும்.

**சிங்கள மக்களைப் பொறுத்த வரையோ மரணபயமற்ற ஒரு சண்டை நிகழாத, குண்டுகள் வெடிககாத சூழ்நிலையே 'சமாதானம' என்ற சொல்லால் உருவாக்கப்பட்ட கருத்து நிலை யாகிறது. இதற்குமேல் தமிழர் தாயகம், தேசியம் என்பவற்றின் மீது எழுகின்ற அதிகாரப் பரவலாக்கம் அல்லது சமஷ்டி என்பது இலங்கையைத் துண்டாடும் செயலாகவே பொருள்கொள்ளப் பழக்கப்படுத்தப்பட்டுவிட்டனர்.**





யுத்தம் நிறுத்தப்பட்ட மூன்று வரு டங்களின் பின்பும், இன்னும் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பமுடி யாத அல்லது திரும்பியவர்கள் கூட, தமக்கென ஒரு இலபிடத்தை அமைத் துக் கொள்ளமுடியாத நிலையில் இருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களின் துயரக்கதைகளையும், இன்னும் அதிகமானோர் மீது சுமத் தப்பட்டிருக்கும் இராணுவ, பொரு ளாதார நெருக்கடிகளையும் மறைத்து, பொய்யான அபிவிருத்தி பற்றிய பிர சாரப் புயல்களே அரசின் அதிகாரத் தில் இருப்பவர்களால் பரப்பப்பட்டு வருகிறது.

பெரும்பாலான சிங்கள ஊடகங் களும் இதற்கு துணைபோகின்றன. இந்த மக்களின் துயரங்களை சிங் கள மக்கள் அறிந்துகொள்ள முடி யாதநிலை பேணப்படுகிறது.

சிங்கள மக்களைப் பொறுத்த வரையோ மரணபயமற்ற ஒரு சண்டை நிகழாத, குண்டுகள் வெடிக் காத சூழ்நிலையே 'சமாதானம்' என்ற சொல்லால் உருவாக்கப்பட்ட கருத்து நிலையாகிறது. இதற்குமேல் தமிழர் தாயகம், தேசியம் என்பவற்றின்மீது எழுகின்ற அதிகாரப் பரவலாக்கம் அல்லது சமஷ்டி என்பது இலங் கையைத் துண்டாடும் செயலாகவே பொருள்கொள்ளப்பழக்கப்படுத்தப் பட்டுவிட்டனர்.

இது 'மகாவம்சம்' எழுதப்பட்ட காலத்தின் நீட்சியாக இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. ஆயிரத்துக் மேற்பட்ட சதுர கிலோமீற்றர் நிலப் பரப்பை படையினர் கட்டுப்பாட் டுக்குள் கொண்டுவர முடியாதிருந் ததே புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையாக இருந்தது என்பது மட்டுமல்ல, சமவலுவுள்ள இரண்டு மரபு வழிப்படைகள, இரண்டு தேசி யக்கொடிகள், இரண்டு நீதிநிர்வாக முறைகள், சட்டம், ஒழுங்கைப் பேணும் இரண்டு வேறுவேறான காவற்துறைகள் என்பன இந்தத் தீவில் உருவாகிவிட்டதை அவர்கள் கருத்து ரீதியாக இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை உண்மையிலேயே தமிழ்மக்களின் இயல்பு வாழ்வை உருவாக்கும் ஒரு ஊடகம் என்ப தற்கப்பால் அவர்களுக்கு சொல்லப் படுவதைப்போன்று பிரிந்து செல் வதற்கான உபாயமாக அது அமைய வில்லை என்பதை அவர்கள் சரி யாகப் புரிந்துகொள்ளமுடியும் போதே அவர்கள் இலங்கைத் தீவின் சமா தானம் பற்றிய சரியான யதார்த்த மான நிலைப்பாட்டுக்குவரமுடியும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசுட னான சமாதானப் பேச்சுவார்த்தை களின் விளைபொருளான 'சிரான்' அமைப்பின் செயற்பாடு ஐக்கிய தேசியக் கட்சி அரசின் நிதி ஏற்பாடு களின் உள்வருகையினாலேயே குழம்பிப்போனதை அதுபற்றி நன்கு ஆராய்ந்தவர்களால் புரிந்து கொள்ள முடியும். அதற்கான நிதிக் கொள்கை களை கொழும்பில் இருந்தவர்கள் மட்டுமே தீர்மானிக்க முனைந்ததை யும், இலங்கையின் நிர்வாகச் சட்டத் தின் தாபனக்கோவை (A.R) மற்றும் நிதிப்பிரமாணங்கள்மூலம் (FR) கட் டுப்படுத்த முயற்சித்தமைக்கு அப் பால், வடகிழக்கின் புனர்வாழ்வு, புனர மைப்புக்குப் பொறுப்பாக இருந்தவர் கள், இப்போது இருக்கின்றவர்கள். பத்திரிகைளின் முழுப்பக்க விளம் பரங்களோடு, தமது சட்டைப்பை களை நரப்புவது மட்டுமே நடைமுறை யாகும். சரியான முறையிலமைந்த புரிந்துணர்வு மட்டுமே இலங்கைத் தீவின் நிலையான சமாதானத்தின் திறவுகோலென்பதை எவரும் மறந்து விடக்கூடாது.

புதிய ஆசிரியத்துவ உருவாக்கம்

பா.தனபாலன்

# தேசிய கல்வி முறையின் அச்சாணியான ஆசிரியர்கள்



நவன ஆசிரியர் கல்வி, பல பரிமா ணங்களில் விரிவடைந்து வருகிறது. ஆசிரியம் உயர் தொழில் அந்தஸ் துடைய வாண்மையாக விருத்திய டைய, வடக்கு - கிழக்கு மாகாணத் தின் ஆசிரிய நிலையங்கள் இணைந்து கடந்த சனி, ஞாயிறு தினங்களில் ஆசிரிய வாண்மை தினத்தை யாழ்.இந்து மகளிர் கல் லூரியில் அனுஷ்டித்தன. இதில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த முந் நூறுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் ஏனைய வடக்கு-கிழக்கு மாகாணங் களைச் சேர்ந்த நூறு ஆசிரியர்களும் பங்குபற்றினர்.

ஆசிரியர்களிடையே ஒரு புத்து ணர்வை மீள் எழுச்சியை. வாண்மை விருத்தியை, விழுமிய அபிவிருத் தியை, தேசப்பற்றை ஏற்படுத்தவும், ஆசிரியர்களின் வகிபாகத்தை உறு திப்படுத்தவுமான பல் ஊடக வெளிப் படுத்தல்கள் (Multimedia Presentation) இந்த இருநாள் செயலமர்வு களில் வெளிப்படுத்தப்பட்டன.

ஆசிரிய வாண்மையும், தொழில் வழிகாட்டலும், விளையாட்டின் மூலம் ஆரம்ப கணித கற்றல் உத்தி கள், செயல்நிலை ஆய்வும், செயற் பாடுசாா பாடத்திட்டமிடலும், வினைத் திறன்மிக்க கற்றலின் பிரதி பலிப்புக் கள் குழுவாக்கல், உத்திகள் மாண வர்கள் எதிர்நோக்கும் உளவியற் சவால்கள் மகிழ்ச்சிகரமான கற்றல் புத்துணர்வூட்டல் நுட்பங்கள், கற் றல்-கற்பித்தல் ஊடகமாக பொம்ம லாட்டம் நவீன கற்றல் - கற்பித்தல் துணைச்சாதனங்கள் GTZ நிறுவன கல்விப் பணிகள் ஆகிய தலைப்புக் களில் கள நிலைச் ( பற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆசிரியர்களின் கடமைகள், கடப் பாடுகள், வகை கூறல்கள், குண நலன்கள், விழுமியங்கள், என்பவை பற்றி நிலவும் புதிய ஆசிரியத்துவ தேவைகளுக்கும், உருவாக்கங்க ளுக்கும், ஈடுகொடுக்கும் வகையில் செயற்பாடுகள் சார்ந்த வழிகாட்டல் களினூடு இந்த நிகழ்வில் பங்கு பற்றிய ஆசிரியர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் செயலாற்றினர்.

அறிவின் நுழைவாயில்கள் எனப் படும் உசாவல் விருப்ப (Euriosity) கற்றல் முறைகளான விடய ஆய்வு, செயற்பாட்டு முறை, கற்றற் களங்கள் விமர்சனத்தர்கிப்புக்கள், எண்ணக் கருப் படங்கள், சிந்தனைக்கிளரல் கள், பங்கேற்று நடித்தல், நவீன உபகரணப்பயன்பாடு வெளியீடுகள் வழிகாட்டிகள் மூலமான அணிக் கலந்துரையாடல்கள், கண்டுபிடித் தல் முறைகளினுடாக ஆசிரியர்க ளுக்கு தொடருறு (Continuing Education) பயில்வு மேற்கொள் ளப்பட்டது. முதற் தடவையாக வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆசிரிய வளநிலையப் பிரிவு இவ்வாறானதொரு கல்வி யியல் செயலமர்வை யாழ்பாணத்தில் நடத்தியமை வரவேற்கத்தக்கது.

மேலும் இந்தச் செயலமர்வை ஆசிரிய நிலையங்கள், யாழ்.பல் கலைக்கழகம், யாழ்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ் மாவட்ட வலயக் கல்வித் திணைக்களங்கள், வடக்கு - கிழக்கு கல்வி அமைச்சு GTZ நிறுவனம் என்பன ஒருங்கி ணைந்து தமது வளவாளர்களின் நிபுணத்துவ வழிகாட்டலைப் பிர யோகித்தமை மிகுந்த வரவேற்புக் குரிய விடயமாகும்.

**ஆசிரியம் - விமர்சனங்கள்**

இன்று தேசிய கல்வி முறையின் அச்சாணிகளாக ஆசிரியர்கள் உள் ளனர். இவர்களின் செயலாற்றுகை கள், அர்ப்பணிப்பு மற்றும் வாண்மை குறித்த சந்தேகங்கள் தற்போது சற்று உரத்தே ஒலிக்கின்றன. பல விமர்சனங்களும எழுந்து வருகின்றன.

இந்த நிலைக்கு ஒட்டு மொத்த மாக ஆசிரியர்களையே குற்றம் சுமத் துவது, விமர்சிப்பது ஏற்புடையதா காது. ஆசிரியர்களின் தொழிசார் மேம்பாடுகளுக்கும், உயர்கல்விக் கும் வாண்மை விருத்திக்கும், எமது தேசிய கல்வி முறைமையில் செய் யப்பட்டுள்ள ஏற்பாடுகள் போதுமான வையாக உள்ளனவா? என்ற வினா வுக்கு எவராலும் உடன்பாடான ஒரு விடையை அளிக்கமுடியாது. அது வும் சிங்களப்பிரதேசங்களுடன் ஒப் பிடுகையில் தமிழ்கள் பரந்து வாழும் வடக்கு - கிழக்குப் பகுதிகள் பல வளப்போதாமைகள், வசதியீனங்கள் தொடர்ந்து நிலவுகின்றன.

வடக்கு - கிழக்குப் பிராந்திய கல்வியைச் சிதைத்து, அதனூடு மக்களின் இருப்பை அழிக்க, கல் விப் புலத் தலையீட்டை நியாயப்ப டுத்தி கற்கமுனைந்த மாணவர் களின் பாடநூல்கள், நூலகங்கள் எரிக்கப்பட்ட வரலாறு எமக்குண்டு. எமது பிள்ளைகள் பிறந்து வாழ வேண்டிய, தலைநிமிர வேண்டிய மண் இதுவாகும். இதற்கு ஆசிரியர் களின் தியாகமும், அர்ப்பணிப்பும், இன்று அவசிய தேவையாகவுள் ளன. இதற்குத் தற்போதைய ஆசிரிய பரம்பரையினரை மனப்பாங்குகளால் ஆயுதபாணிகளாக்கவேண்டும். இந்த ஆயுதங்கள் அர்ப்பணிப்பு, வகைகூறல் கடப்பாடு, ஒழுக்கம், அன்புடமை, சுய நலமின்மை, கல்வியின் ஞான பொக் கிஷத்தை அடையும் அவா என் பவையாக இருக்கவேண்டும். இதற்கு ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திப் பயில்வுகள் அவசியம். இந்தத் தேவையை உணர்ந்து ஆசி ரிய வாண்மை விருத்தி தினப்பயில ரங்கு, ஒழுங்கமைக்கப்பட்ட செயல் முறை இன்றைய காலத்தின் தேவை. வரவேற்கப்படக்கூடிய ஒன்றாகும்.

பாடசாலை வகுப்பறை எம் வாழ்க்கை பூராகவும் நினைவில் நிலைததுவிடும் ஓர் இடமாக விளங்கு வதற்கான காரணம், எமக்குப் பிடித்த மான அதன் தன்மையே ஆகும். பெரும்பாலான மகான்கள், தேச விடுதலை வீரர்கள் தம் பாடசாலைப் பராய வகுப்பறையினை மிகுந்த விருபபோடு நினைவு கூருகிறார்கள்.

வகுப்பறைமீது தம் பக்தியை வெளியிடுகின்றார்கள். அவர்களது உன்னதத் தன்மைகளை அவர்க ளுக்கு உரித்தாக் கிய வகுப்பறைப் பின்னணியில் அலங்கார ஒளி விளக்குகளாக வழிகாட்டி நிலைத்து நிற்போர் அவர்களது ஆசிரியர்களே யாவர். கல்வியானது என்றும் ஆசிரிய மாணவரின் உயிர்த்துடிப்பான இடை வினைகளினூடாகவே பிறக்கின்றது.

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்*
*இன்னாவாம் இன்னா செயின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சந்தேகத்துக்குள்ளாகும் அமைச்சரின் விஜயம்!

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க - நேற்று முன்தினம் யாழ் குடாநாட்டு படைத தளங்களுக்கு விஜயம் செய்து அங்குளள பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய்ந்திருக்கிறார்.

முப்படைத் தளபதிகள் சகிதம் இடம்பெற்ற இந்த விஜயம் - முன்கூட்டியே திட்டமிடப்பட்டதாகக் கூறப் பட்ட போதும் - இப்போதைய சூழலில் இது முக்கியத்துவமாகவே பார்க்கப்படுகிறது.

கருணாவின் நடவடிக்கைகள், அமைச்சர் டக்ளஸ தேவானந்தாவுடனான தொடர்புகளால் அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான இயல்பற்ற உறவு நிலையை தோற்றுவித்திருக்கின்ற சூழலிலேயே இந்த விஜயம் இடம்பெற்றிருக்கிறது.

யுத்தம் ஒன்று மூழுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் வலுவாகத் தோற்றம் பெற்றிருக்கின்ற சூழ் நிலையில், பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், முப்ப டைத் தளபதிகளும் படைத்தளங்களுக்கு விஜயம் செய்திருப்பது இந்த சந்தேகத்தை மேலும் வலுப்படுத் தியிருக்கிறது.

புதிதாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி யேற்ற பின்னர் - ரட்ணசிறி விக்கிரமநாயக்க மேற் கொள்ளும் முதல் உத்தியோகபூர்வ விஜயமாக இந்தக் குடாநாட்டுப் பயணம் அமைந்திருந்தது.

இவர் பதவியேற்று பல வாரங்களாகிவிட்ட போதும் இப்போது தான் - அதுவும் குடாநாட்டு போர்முனைப் பகுதிகளுக்கு முதல் விஜயத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற தேவை இல்லை.

எவ்வாறாயினும் படையினரை உற்சாகப்படுத்த வும், ஊக்குவிக்கவுமே இந்த விஜயம் அமைந்தி ருக்கிறது. அது மட்டுமன்றி, படையினருடனான சந் திப்புக்களின் போது - அவர்களுக்கு மேலதிக வசதி கள் ஏற்படுத்திக் கொடுப்பது-

மேலதிக படைகளைத் திரட்டி அனுப்புவது பற்றி யெல்லாம் இவர் கருத்து வெளியிட்டிருக்கின்றார். புதிதாகப் படைகளைத் திரட்டி அதுவும் யாழ். குடா நாட்டுக்கு அனுப்பப் போவதாகவும் இவர் குறிப்பிட் டிருப்பது முற்றுமுழுதான இராணுவ அக்கிரமிப்புவாத மேயன்றி வேறில்லை.

இப்போது இருக்கும் இராணுவத்தினருக்கு உத வியாக - மேலதிக படைகளைத் திரட்டி அனுபபி இங்குள்ள படையினரின் சுமைகளைக் குறைக்கப் போவதாக இவர் கூறியிருப்பது - யாழ்ப் பாண மக்க ளின் மனங்களில் பெரும் சுமைகளைக் கொடுத் திருக்கிறது.

குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் படையினர் நிலைகொண்டுள்ள பெரும் பிர தேசங்களில் மீள் குடியமர்வை மேற்கொள்ளுமாறு தொடர்ந்து பொது மக்கள் மத்தியில் கோரிக்கை கள் விடப்பட்டன.

புலிகளும் சமாதானப் பேச்சுக்களின் போது இது குறித்து கோரிக்கைகளை முன்வைத்தாலும் அரச தரப்பு இம்மியளவும் இணங்கிவரவில்லை.

ஏதேதோ வெளிநாட்டு இராணுவ நிபுணர்களை எல்லாம் கூட்டிவந்து அவர்களின் அறிக்கைப்படி தான் மீள்குடியமர்வு குறித்து தீர்மானிக்கலாம் என்று கூறியது.

பின்னர், அவர்களும் அரசு விரும்பியபடியே அறிக்கை கொடுத்ததால் உயர்பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு கனவாகவே போய்விட்டது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவின் இந்த விஜயத்தின்போது உயர் பாதுகாப்பு வலய மீள் குடிய மர்வு பற்றி எதுவுமே ஆராயப்படவில்லை என்று பாது காப்பு அமைச்சு தெரிவித்திருந்தது.


ஆனால், மக்களின் இயல்பு வாழ்வை சீர்ப்படுத்து வது குறித்து பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் இந்த விஜயத்தில எந்தக் கரிசனையும் காட்டவில்லை.

அதுமட்டுமன்றி சிவில் அதிகாரிகளுடனும் மக்க ளின் எந்த பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப் படவோ, ஆலோசிக்கப்படவோ இல்லை.

தமது விஜயத்தை முற்றுமுழுதாக இராணுவ ஆக்கிரமிப்பை வலுப்படுத்தும் விஜயமாகவே ரட்ண சிறி விக்கிரமநாயக்க பயன்படுத்திக் கொண்டிருக்கின் றார்.

இவர் முன்னர் பிரதமராக இருந்த காலத்தில் தமிழ் மக்களுக்கெதிரான கருத்துக்கள் வெளியிடு வதில் முன்னிலை வகித்திருந்தார். இப்போது தனக் குக்கிடைத்த பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவி மூலம் தமிழ் மக்களுக்கெதிரான நடவடிக்கைகளை செயற்படுத்த ஆரம்பித்திருப்பதையே இவரது குடா நாட்டு விஜயம் எடுத்துக்காட்டுகின்றது.

## நாடும் நடப்பும்




# கொள்ளுப்பிட்டி தற்கொலை குண்டுதாரி பணிப்பெண்ணாக பணியாற்றியவராம்!

கொழும்பில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற் கொண்டவர் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் ஒருவரது மகனின் வீட்டில் பணிப்பெண்ணாகப் பணியாற்றி யதாகப் புலனாய்வுப் பிரிவை மேற்கோள்காட்டி கொழும்பிலி ருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த இந்த அமைச்சரின் மகனின் கொழும்பு இல்லத்திலேயே இந்தக் குண்டுதாரி சுமார் ஒன்றரை வருட்ங்களாகப் பணிப் பெண்ணாகப் பணியாற்றியதாகவும் -

இவர் ஒரு குண்டுதாரி என்பதை அப்போது தன்னால் உணர முடியவில்லை என, இந்த அமைச்சரின் மகன் புலனாய்வுத் துறையினருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதா கவும் அந்த ஆங்கில நாளேடு குறிப்பிட்டுள்ளது.

தனது வீட்டில் மிகவும் நல்ல ஒழுக்கமுள்ள பணிப்பெண் ணாகப் பணியாற்றி வந்த இந்தக் குண்டுதாரி, குண்டுத்தாக் குதல் இடம்பெறுவதற்கு சிலநாட்களுக்கு முன்னரே தனது வீட்டிலிருந்து விலகிச்சென்றதாகவும், தனது வாக்குமூலத்தில் முன்னாள் அமைச்சரின் மகன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்கொலைக் குண்டுதாரியை முன் னாள்அமைச்சரின் மகனுக்குப் பணிப்பெண்ணாக அறிமுகப் படுத்திய பெண் ஒருவரைத்தாம் கைதுசெய்துள்ளதாகப் பொலி ஸார் தெரிவித்தனர்.

## கடற்தொழிலாளர் சங்கங்களுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சமாசங்களின் சம்மேள னத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல கடற் தொழிலாளர் சங்கங்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் பின் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களை, மீனவர் சங்கப் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சமாசங்களின் சம்மேளன அலுவல கத்தில் வைத்து சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## வாண்மை விருத்தி சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன!

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை மேம்படுத்தும் முகமாக சஞ்சிகை ஒன்றை வெளியிடுவதற்கு வலயக் கல்வி அலுவலகம் நடவ டிக்கை மேற்கொண்டுவருகிறது.

எனவே, பாடசாலை ஆசிரியர்கள் தரமான ஆக்கங்களை ஒகஸ்ட் 25 ஆம் திகதிக்கு முன்னர் நெல்லியடி ஆசிரியர் பயிற்சி நிலையத்துக்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சஞ்சிகைக்காக பின்வரும் தலைப்புக்கள் தரப்பட்டுள்ளன- 'நவீன கல்வியில் ஆசிரியர்களின் திறன்கள்', 'சர்வதேச மயமாக்கப்பட்ட கல்வி', 'மாணவரும் இணைப்பாடவிதான செயற்பாடுகளும்', 'கல்விச் செயற்பாடுகளில் பெற்றோரின் பங் களிப்பு'.

ஆக்கங்கள் 250 - 350 சொற்களுக்கு மேற்படாமல் இருத் தல் வேண்டும். தரமான ஆக்கங்களுக்கு சான்றிதழ்கள் வழங் கப்படும். (122)

## நெடுந்தீவு தபாலக வளாகத்தில் கடற்படையினரின் முகாம்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதம தபாலகம் அமைந்துள்ள வளாகத்தில் கடற்படையினர் முகாம் அமைக்கும் பணியினை ஆரம்பித்துள் ளதாகத் தெரியவருகிறது.

கடந்த மாத முற்பகுதியில் இப்பகுதி படையினரால் துப்பு ரவு செய்யப்பட்டதுடன், வேலைகள் யாவும் இடைநிறுத்தப் பட்டிருந்தன. ஆனால் தற்போது இவர்கள் முகாம் அமைக்கத் திட்டமிட்ட பகுதியை தபால் திணைக்களத்திடமிருந்து அரச அங்கீகாரத்துடன் பெற்றுள்ளமையால், மீண்டும் வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை இந்த வளாகப் பகுதியில் இருந்த கட்டடம் ஒன்றும் துப்புரவு செய்யப்பட்டு வருவதுடன், அந்தக் கட்டடத் தில் இருந்த தேவையற்ற பகுதிகள் உடைக்கப்பட்டு சுத்தப் படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (113)

## ஹிங்குராங்கொட சம்பவத்துக்கும் ஹெல உறுமயவுக்கும் தொடர்பில்லையாம்

(கொழும்பு)

பொலநறுவை - ஹிங்குராங்கொடவில் தமிழ் இளைஞர்கள் தங்கவைக்கப்பட்டமைக்கும், தமக்கும் எதுவித தொடர்புகளும் இல்லையென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கருணாவின் ஆதரவாளர்கள் எனத் தெரிவிக்கப்படும் இந்த இளைஞர்களுக்கு உதவியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட தமது நாடாளுமன்ற உறுப்பினர் - இளைஞர்கள் கைதுசெய்யப்பட்ட போது கொழும்பில் இருந்ததாகவும், ஜாதிக ஹெல உறுமய வின் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் பொலநறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இந்த விகாரையில் தங்கியிருப்பவருமான பௌத்த பிக்குவின் கட்டளையின் பேரி லேயே, குறிப்பிட்ட 14 இளைஞர்களும் விகாரையில் தங்க வைக்கப்பட்டதாக இவ்விகாரையின் பிரதம குரு பொலிஸாரி டம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாகாணசபைத் தேர்தலில் நான்கு தமிழர்கள் தெரிவு!

(கொழும்பு)

நடைபெற்றுமுடிந்த மாகாணசபைத் தேர்தலில் மேல்மாகாண சபைக்கு இம்முறை நான்கு தமிழர்கள் தெரிவாகியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் இருவரும், மக்கள் விடு தலை முன்னணி சார்பில் ஒருவரும், மேல் மாகாண மக்கள் முன்னணி சார்பில் ஒருவரும் தெரிவாகியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கிருசாந்தன் யோகதாஸ், பஞ்சரத்தினம் ராம் 20,282 வாக்குகள் பெற்றும், மாணிக்கவேலம்மாள் செல்லச்சாமி 14,382 வாக்கு களைப் பெற்றும் தெரிவாகியுள்ளனர்.

ஜே.வி.பியின் சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியில் போட்டியிட்ட எம்.மோகன் 20,909 வாக்குகள் பெற்றும் தெரிவாகியுள்ளார்.

மேல்மாகாண மக்கள் முன்னணி சார்பில் பிரபா கணேசன் தெரிவுசெய்யப்பட்டார். இவர் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனின் சகோதராவார். (தே)

சர்வதேச புலனாய்வு அரசியல் -வன்கூவரிலிருந்து ரிஷி

# மீண்டும் அமெரிக்காவுக்கு தலைவலி

இவ்வேளை, பலரையும் உறுத் திக் கொண்டிருக்கும் ஓர் விடயம்- ரஷ்யா இன்றிருக்கும் நிலையில், இப் போதிருக்கும் பலத்துடன் அமெரிக் காவுக்கு அச்சுறுத்தலாக இருக்கப் போகிறதா?

Operation Security 2004 நடத்


S.S.N23 ஏவுகணை

தியதால் இந்தக் கேள்விக்கு - மேலோட்டமான பதில் ஒன்றும், ஆச் சரியகரமான பதில் ஒன்றும் உள் ளது. மேலோட்டமான பதில் ஒரு போதும் ரஷ்யாவால் அமெரிக்கா இன்றிருக்கும் வல்லரசு நிலைக்குக் கிட்டவும் வரமுடியாது. காரணம் ரஷ்யா வல்லரசு Race இல், 15 வருடம் பின் தங்கி விட்டது. இந்த 15 வருடங்களில் அமெரிக்கா நிறை யத் தூரம் ஓடிவிட்டது.

இப்போது விட்டதைப் பிடிப்பது கொஞ்சம் கஷ்டமான காரியம். மேலோட்டமாகப் பார்த்தால், இந்தக் கூற்று சரி என்பது போலத்தான் தோன றும். பலர் அப்படித்தான் நினைத் திருப்பீர்கள், இந்த விவகாரத்தில் மறைமுகமான வேறுவிடயமும் உண்டு. அதையும் சேர்த்து வைத்துப் பார்த் தால் ஆச்சரியகரமான பதில் கிடைக கும். அந்தப்பதில் ரஷ்யாவுக்கு இன் னமும் ஓர் சந்தர்ப்பம் இருக்கிறது. அமெரிக்காவுடன் Neck to Neck போட்டி யில் ஈடுபட.

ரஷ்யா கடந்த 10 வருடங்களாக எந்தவொரு பாரிய இராணுவ நட வடிக்கையிலும் ஈடுபடவில்லை. அவா களது பொருளாதார நிலையும், சொல் லிக் கொள்ளுமளவில் இருக்க வில்லை. நாட்டைச் சுற்றி இருந்த இரும் புத்திரை அகன்று போய், கட்டுப்பாடெல்லாம் சலசலத்துப் போய் இருந்தது. சுருக்கமாகச் சொன்னால், பழைய GRIP இல்லை. இருந்த போதி லும் இராணுவப் பட்டியலை பெரி தாக வெட்டாமல் ஓரளவுக்கு Main tain பண்ணிக் கொண்டு தான் வந்திருக்கிறார்கள் வல்லரசுப் போட் டியில் இருந்து பின்தங்கி விட்ட பின்னரும் - ரஷ்ய ஆயுதத் தயாரிப் புகள், ஆயுதத் தளபாட ஆராய்ச் சிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இன் றும் உலகில் பல முனைகளிலும் பயன்படுத்தப்படும் ஆயுதங்களில் ஓர் குறிப்பிட்ட சதவீதம் ரஷ்ய ஆயுதங் கள்தான். அந்த அளவு - சுமார் 35 சத வீதம் என்று சொல்லப்படுகிறது.

இராணுவத் தளபாடம் சம்பந் தப்பட்ட தொழில்நுட்பமும் கிட்டத் தட்ட அந்தளவு சதவீதம் வரை உலகம் முழுவதும் உபயோகிக்கப் படுகின்றன.


இதைத்தவிர, யுத்தத்தில் Ac- tive ஆக இருக்கும் சில நாடுகள் அல்லது யுத்த ஆயத்தங்கள் செய் யும் சில நாடுகள் இன்று கூடவைத் திருக்கும். Priority Number One ரஷ்ய Arms Techology யில் சொந்த மாக சிலவெற்றிகளைப் பெற்றுள்ள இந்தியா போன்ற நாடுகளிடம் இருக் கும் அடிப்படை அல்லது Funda- mental Equipments இன்னமும் ரஷ் யத் தயாரிப்புக்கள்.

ரஷ்யாவின் முப்பது வருடத்துக்கு முற்பட்ட இராணுவத் தளபாடத் தொழில்நுட்பங்கள் கூட இன்னமும் பல நாடுகளில் பழுதடையாமல் சரி யாக வேலை செய்கின்றன. ரஷ்யா வும், அதற்குத் துணிந்து Extented Warranty கொடுக் கிறது.

இந்த அடித்தளத்தை வைத்து ரஷ்யா மீண்டும் தான் விட்ட இடத் தைப் பிடிக்கமுயற்சிப்பது சாத்தியமே.


இதை நினைப்பில் வைத்துக் கொண்டு கட்டுரையைப் படியுங்கள். நாம் எங்கே வருகிறோம் என்பது புரியும்.

Operation Security 2004 இல் குழறுபடியில் முடிந்து போன ஒரு விடயம் பற்றி ஏற்கனவே குறிப் பிடப்பட்டது. அதுவும் ரஷ்ய அதி பரின் கண்முன்னால் ரஷ்ய இரா ணுவத்துக்கு ஏற்பட்ட தலைகுனிவு என்று இந்த முழு Operation இலுமே அனைவராலும் ஆவலுடன் எதிர்பார்க் கப்பட்ட நிகழ்வும் அதுதான். ரஷ்ய இராணுவமும் அதற்குத்தான் முழு முக்கியத்துவம் கொடுத்து ரஷ்ய அதிபரை நேரில் பாரக்க வரும்படி அழைத்திருந்தது ஒருஏவுகணை ஏவல் செயல் முறையே அந்த முக்கிய


டெல்டா-4 நீர்மூழ்கி

மான நிகழ்வாகும். ரஷ்ய உளவுத் துறை வேறு, ரஷ்ய அதிபர் இந்த ஏவுகணை வீச்சுப் பயிற்சியில் பங்கு கொள்வதால் சர்வதேச அரங்கில் ரஷ்யாவின் செல்வாக்கு Boost பண் ணப்படும் என்று நினைத்து, ரஷ்ய அதிபர் கலந்துகொள்வதற்கான முதற் கட்ட அனுமதியைக் கொடுத்திருந் தது.

அதன்பின்னர் அடுத்தகட்ட அனு மதிக்கான அலசல் - Secondary Ana lysis இல், ஏவுகணை எங்கிருந்து ஏவப் படப்போகிறது? அதனை ரஷ்ய அதிபர் எங்கிருந்து பார்ககப் போகி றார்? ஏவபபடும் இடமும், ரஷ்ய அதிபர் பார்வையிடும இடமும் பத்திர மானதா? ஏவு கணை ஏவுதலில ஏதேனும் தொழில் நுட்பச் சிக்கல் ஏற பட்டு, அது Miss Fire பண்ணினால ரஷ்ய அதிபர் இருக் கும் இடத்தை நோக்கி வருமா? என்பது போன்ற 2ஆம் கட்ட ஆய்வு களை ரஷ்ய உள வுத்துறை செய்து, எல்லாம் உறுதி செய்யப்பட்ட பின்னர் - இறுதி அனு மதியை வழங்கியிருந்தது. ஓர் கப் பலில் இருந்து ஏவப்பட வேண்டிய ஏவுகணை, அந்த ஏவலைத் தரை யிலிருந்து பார்ப்பது துல்லியமாக இருக் காது, என்ற கார ணத்தால் ரஷ்ய அதி பருக்கு ஏவுகணை ஏவப் படும் நேரத்தில் கப்பலில் இருந்து பார்வை யிடத்தக்க தாக ஒழுங்குகள் செய்யப்பட்டிருந் தன.


ரைபூன் நீர்மூழ்கி

ஏவுகணை ஏவு தலுக்காக தெரிந் தெடுக்கப்பட்டது, ரஷ்ய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் Delta-4 வகையிலான நீர்மூழ்கிக் கப்பல் ஆகும். அதன் பெயர் Pro ject Number-667-B.D.R.M. ஏவு கணை ஏவுதலை ரஷ்ய அதிபரும் வேறு சில இராணுவ உயர் ரதிகாரி களும் மற்றுமோர் நீர்மூழ்கிக் கப்ப லில் இருந்து பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த நர் மூழ்கிக் கப்பல் பாது காப்பானது!. அதன் பெயர் "ஆர்ச்சன் ஹெல்ஸ்" சர்வதேசக் கடற்படைத் தளப்பாஷையில் இவ்வகை நீர் மூழ் கிக் கப்பலை "ரையூன் கிளாஸ் சப்மறின்" என்றழைப்பர். இதற்கு ரஷ்யர்கள் வைத்திருக்கும் பெயர் Project 941.

இவ்வளவு முன்னேற்பாடுகளுடன தயார் செய்யப்பட்ட அந்த நிகழ்வு - S.L.B.M. ஏவுதலுக்கான பயிற்சி. அல்லது செயல்முறை விளககம்.

S.L.B.M என்பது Sri Lanka Bandaranayaka Memorial Hall அல்ல. Sea Launch Balastic Mis- siles ஆகும் இது கடலில் இருந்து ஏவப படும், Blastic வகை ஏவுகணை. Operation Scurity 2004 இன் High Light ஆன ஏவல் Delta-4 ஏவப் படத் தயாராக இருக்க ரஷ்ய அதிப ரும், மத்திய அதிகாரிகளும் நைருள் கிளாஸ் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து அதைப் பார்வையிடத் தயாராக இருக்க, நேரம் ஓடியதே தவிர ஏவுகணை கிளம்பிய பாடாகவில்லை.

ஏவப்பட்டிருக்க வேண்டிய ஏவு கணை S.S.N.-23 வகை ஏவுகணை என்று நம்பப்படுகிறது. காரணம் அது எவ்வகை ஏவுகணை என்று ரஷ்யத் தரப்பில் இருந்து யாருமே உறுதி யாகச் சொல்வாரில்லை. அதுவும் தோல்வியில் முடிந்ததால், யாருமே மூச்சுவிடத் தயாரில்லை. இவர்கள் தயார் செய்திருந்தது. S.S.N.-23 என்று ஊகிப்பதன் காரணம் அந்தச் சமயத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங் களில் காணபபட்ட உருவமைப்பு, செய்யப்பட்ட முன்னேற்பாடுகள், ஏவப பட இருந்த Location மற்றும் உப யோகிக்கப்பட்ட Missile Launcher என்பவற்றின் அடிப்படையிலே.

(தொடரும்)

செய்திக்கட்டுரை... - கனகரவி வவுனியா

# புலம்பெயர்ந்த உடல்களும்... புலம்பெயரா மனங்களும்...

எமது தேசத்தில் நடந்து கொண் டிருக்கும் விடுதலைப் போராட்டத்து டன். சமூகத்திலுள்ள சீர்கேடுகளைக் களைவதும் சமகாலத் தேவையா கவே உள்ளது. இதற்குள் புதிய வடிவுடனான பிரச்சினையொன் றையும் மக்கள் சந்தித்து வருகின்ற னர். இதனை எம்மில் பலர் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லையெனி னும், ஒரு தேவைகருதி... எதனை இங்கு ஆராய வருகின்றேன் என்ப தற்குள் நுழைவோம்.

போர் என்ற பெயருடன் தமிழ் மக்களை ஒடுக்கவும், தமிழர் தயா கத்தை ஆக்கிரமிக்கவும், எந்தக் காலப்பகுதியிலும் திட்டமிட்ட சதி வேலைகள் இடம்பெற்று வருகின் றன. அது போர்க்காலம், சமாதானக் காலம் இரண்டும் இல்லாத காலத்தி லும் கூட, இதனால் எம்மவர்கள் பல நாடுகளுக்குள் தஞ்சம் புகுந்தனர். இதன் மாற்றுச் சிந்தனையாக, பொரு ளாதாரத்தை இலக்கு வைத்தும் பல நாடுகளுக்குள் புகுந்த கொண் டனர். இப்படியான செயல் ஏராள மான நன்மைகளையும், சிலபல தீமைகளையும் தந்துள்ள இரண்டு க்கும் நாமே காரணம்.

இதில் இன்றுள்ள பிரச்சினை வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்து, அந்த நாடுகளை தமது நாடென் றாக்கிய சிலர் - இன்று நமது மண் ணுக்கு குடும்பமர்கவோ அல்லது வரக்கூடியவர்களாகவோ வந்து போகின்றனர். இவர்களில் சிலரின் செயல்கள் ஓரளவுக்கு சிந்தித்து செயற்படுகின்றவர்களுக்கு வெட்கத் தையும், இன்னொரு சாராருக்கு மன உழைச்சலையும் ஏற்படுத்துகின்றது. இதில் எவர் மீதும் பழிசுமத்தாமல் உண்மைகளை அலசுவோமாகவிருந் தால்...

சந்தைக்குப் போய் கறி வேண்டு வது தொடக்கம் எமது உறவுகள் பலர் வேதனைப்படுகின்றனர்.

♦ அண்மையில் மானிப்பாய் சந்தையில் நடந்த சம்பவம் ஒன் றைப் பாருங்கள்... மீன் வேண்டுவ தற்காகப் பலர் கூடிநின்றனர். 150 ரூபாவென வியாபாரி விலை சொன்ன மீனை - இன்னும் கொஞ்சம் விலை குறைக்கும் பேரம் பேசுவதில், மீன் வேண்டவந்தவர் ஈடுபட்டு, தொண் ணூறு ரூபாவுக்கு கொண்டுவந்து சேர்த்தமட்டில். தன்னை வெளிநாடொன் றில் இருந்து வருபவர் எனக் காண் பிக்கும் வகையில் வந்தவர், அதே மீனை என்ன விலையென்று கேட் டார். வியாபாரி எந்தத் தயக்கமும் இல்லாமல் 'முந்நூறென்று...' இழுத் தார். சரி நீங்கள் பதினைஞ்சு வருடத் துக்கு முந்தி என்னட்டத்தானே மீன் வேண்டி நீங்கள். இருநூற்றியெண் பதைத் தாங்கோவன் எண்டு சொல் லவும்.. வந்தவர் மூன்று நூறு ரூபாய்த தாள்களை வியாபாரியின் கைக்குள் திணித்துவிட்டு, பரவாயில்லை வைச சுக் கொள்ளுங்கோ எண்டு மீனை வேண்டிக் கொண்டு போகவும் அவ் வளவு நேரம் எடுக்கேல்ல.

இன்னும் கொஞ்ச நேரம் பார்த்த போது பேரம் பேசினவரை வியாபாரி நிமிர்ந்தும் பார்க்கவில்லை. தன்னு டைய இஷ்டத்துக்கு என்னென்ன வோவெல்லாம் சொல்லிக் கொண்டு, தான் பரபரப்பாக வியாபாரத்துள் மூழ்கியவர் போல பாவனை செய்து கொண்டிருந்தார். இதன்போது மீனை வேண்டாது பேரம் பேசியவர் வெளி யில் சென்றபடியே சொன்ன வார்த்தை.. மீன் கிலோ இன்ன விலையொன்று விற்கும் கட்டுப்பாடில்லாத இடத் தில, இதுபோன்ற நீதியில்லாத வியாபாரம் நடக்கும் தான் என்று. அவர் சொன்ன அந்த வார்த்தை சம்மந்தப்பட்டவர்களுக்கு சமர்ப் பணம்.

இந்த இடத்தில் ஒன்றைச் சொல் லியே ஆகவேண்டும். தராசு இரண்டு பேரிடம் உண்டு. ஒன்று நீதி தேவதை யிடம், இன்னுமொன்று வியாபாரியி டம்.. இரண்டு பேரும் நீதியாக நடக்க வேண்டும். மற்றுமொரு விடயம். இந்த மண்ணுக்குள் அவலங்களைச் சந்தித்துப் பல இடப்பெயர்வுகளால் இடர்பட்டு, சுயபொருளாதாரக் கட்ட மைப்பைக் காத்து கூடவே வாழ்ந்த வர். காரல் மீனையோ கடுக்காய் நண்டையோ வேண்டுவதற்கு வந் தால் அதனை குறைவாக எடை போடாதீர்கள்.

இதேவேளை, புலம்பெயர்ந்த வெளி நாடுகளில் வாழும் எமது உறவுகள் அனைவரையும் ஒரே மாதிரி எடை போட்டுவிடக் கூடாது. அங்கு கடும் குளிருக்குள் குறிப்பிட்ட நேரத்துக் கும் அதிகமான கடும் உடல் உழைப்பைச் செய்து யூரோவோ, பவுண்ஸோ, பிராங்கோ, டொலரோ.. உழைத்து ரூபாவின் பெறுமதி தெரிந்து, செலவு செய்யும் பல பேரை நாம் கண்டிருக்கிறோம். நாம் அவர்களின் மனம் புண்படும்படி இதற்குள் எதனையும் சொல்லவர வில்லை. உண்மையினைச் சொல்லு வோம்.

அண்மையில் வவுனியாவில் பெரியவர் ஒருவரை சந்தித்து உரை யாற்றுகையில்.. அவர் சொன்னார். தம்பி நான் இண்டைக்கு மிகவும் கீழ்த்தரமாக மனதில் ஒரு எண் ணத்தை வரவிட்டுவிட்டேன். இப் படியேன் நினைத்தேனென்று கவ லைப்படுகின்றேன், வெட்கப்படுகின் றேன் என்று, அவர் ஆரம்பித்தது இப்படித்தான். என்னவென்று வினா வியபோது மேலும் சொன்னார். ஒரு அன்பரின் பெயரைக் குறிப்பிட்டு அவன் என் பாலிய நண்பன்தான். சுவீஸுக்கு, ஜேர்மனுக்கு, கனடா வுக்கு, லண்டனுக்கு போனானாம். ஒவ்வொரு நாட்டிலையும் பிள்ளை யளிட்டப் போயிட்டு வாறவழியில் பிள்ளையளின்ர விருப்பப்படி ஒரு மாதம் இந்தியாவில் நின்று, கோயில் களைப் பார்த்துப் போட்டு வாந்தா னாம். இதைச் சொல்லேக்குள்ள எனக்கு இப்படியொரு சந்தர்ப்பம் இல்லையே என்று ஏக்கத்துடன் கூடிய எண்ணமொன்று வந்துவிட் டது.

இது சரியோ, பிழையோ எனக் கும் தெரியவில்லையென்றார். நான் அவருக்குச் சொன்ன பதிலை நமது ஈழநாடு வாசகர்களுக்கும் தருகின் றேன். ஐயா நீங்கள் மிகவும் குடுத்து வைத்துள்ளவர். பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், சுற்றஞ்சூழ இருக்கின் றீர்கள். அவர்களுடன் கதைக்கவும், சிரிக்கவும், கூடிச்சாப்பிடவும் போதி யளவு நேரம் உள்ளது. நோயோ, துன்பமோ அருகில் இருக்க, உறவு கள் கூடவே உள்ளனர். நல்ல காற்று வேண்டவும். விழாக்களும், விருந்துகளும், கூடிக் கூழென்றாலும் குடிக்கவும், நாட்டு நடப்பைப் பேசவும் நேரம் இருக்கும். மனதில் இடமும் இருக்கும். உறவுகளைப் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் விட்டுத் தவிக் கும் பெற்றவர்களுக்கு தற்காலிக 'டொனிக்' (Tonic) தான் புலம் பெயர்ந்த நாடுகளில் சென்று பிள்ளை களைப் பார்த்து வருவதென்பது இன்னும் உங்களுக்கு என்ன விளக் கம் சொல்வதோ தெரியவில்லை. வெளிநாடுகள் பற்றி இக்கரைக்கு அக்கரைப்பச்சை என்ற எண்ணமுட னான மனக்கிலேசம் உள்ளவர் களுக்கு, வெளிநாடு சென்று வந்த வர்களின் கருத்தென்ன வென்று சொல்ல வேண்டும். நவீன வசதி கள், மக்களின் நலனுக்கான கடுமை யான சட்டங்கள், உழைப்பவர்க ளுக்கு மதிப்பு போன்றவை நல்ல விடயங்கள் உள்ளன. ஆனால், சுவாத்தியம், உணவு வெளிநாடு களில் இல்லை. கடும் குளிரையும், வெப்பத்தையும் அனுபவிக்க 15 கிலோ உடுப்பையோ அல்லது 1/4 மீற்றர் துணியையோ உடலில் சுமந்து திரியவேண்டும். தென்றலின் இனிமையான எமது மண்ணில் அனு பவிப்பது போல வேறு நாடுகளில் அனுபவிக்க இயலாது இது பொய் யில்லை.

இன்னுமொரு விடயத்தைப் பார்ப் போமானால், தமது பிள்ளைகளை அழைத்து வருபவர்கள் இங்கு வந்த வுடன் தமது முன்னைய வாழ்க்கை பற்றி முற்றிலும் மறந்தவர்களாக தூசு, வெக்கை, குடிக்க நல்ல தண் ணியில்லையென்று ஏதேதோ கூறு கின்றனர். நாம் ஒரு இன அடை யாளத்துடன் சுதந்திரமாக எமது தேசத்தில் மட்டுமே வாழ்கின்றோம் என்பதனை எவரும் நினைக்கத் தவறாதீர்கள். வடலியைக் காட்டி என்ன? என்று கேட்ட கனடாவில் பிறந்த பிள்ளைக்கு பேபி பனை யென்று சொல்லுவதும், வயலின் பசுமையில் மூழ்கிய ஜேர்மனியில் பிறந்த பிள்ளை இதென்ன? என்று கேட்டபோது நெல்லுக்காய்க்கும் மரம் என்று சொல்லுவதும் கௌர வம் என்று எண்ணுகின்றீர்களா? தெரியவில்லை. தாய் மொழியின் கௌரவத்தைப் புதைக்கின்றீர்கள் என்று துணிந்து சொல்லலாம்.

உலகத்தில் எந்த நாட்டில் வாழ்ந் தாலும் பரவாயில்லை, எமது சொந்த மண்ணில் வாழ்பவர்களை நாமே மதிக்காமல் விடுவதைத் தவிர்க்க வேண்டும்.

முட்டைக்குக் கோழி வளர்த்து, பாலுக்குப் பசு வளர்த்து, முற்றத்தில் முருங்கையொன்றும், கிணற்றடியில் வாழை,கமுகு, வளவுக்குள் தென்னை, மா, பலா... எனவெல்லாம் சுயபொரு ளாதார சிந்தனையுடன் வாழும் எமதுறவுகளே இந்தத் தேசத்தின் ஒரு முக்கியசக்தி, இவர்களுடன் எப்படி இணைவது என்று மட்டும் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்து வருபவர்கள் சிந்தியுங்கள். ஆடம் பரமாக கனடாவிலிருந்து இலகு வாக வாழ்வது என்று முடிவாகினால் நாம் இன்னொரு அழிவுப் பாதையில் காலை வைக்கின்றோம் என்பதனை எவரும் மறுதலித்துவிட முடியாது.

எமது தேசம் அழகுடையது, வளமுடையது, நல்லபயன்பாடுடை யது. வெளிநாடு தெரியாதவர் என்று எம்மவரை மடையாராக்குவதை ஒரு சிலர் செய்வதாயினும் ஏற்றுக் கொள்ள முடியாது களத்தையும் - புலத்தையும் இணைக்கும் உறவு களை மட்டுமே மதிப்போம். ❋

உலக நோக்கு

## இந்தியாவின் அசாம், பீகார் உட்பட

# பங்களாதேஷ், நேபாளம் நாடுகளில் வெள்ளப்பெருக்கினால் பலத்த அழிவு



இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான அசாம், பீகார், மேற்கு வங்காளம் உட்பட பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளில் வெள்ளப் பெருக்கு, கடுங்காற்றுக் காரணமாக பலர் உயிரிழந்ததுடன், மில்லியன் கணக்கான மக்கள் குடியிருப்புக்களைவிட்டு இடம் பெயர்ந்தவண்ணமுள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளில் இம்முறை மழைவீழ்ச்சியின் அளவு அதிகமெனவும், அதனாலேயே இந்த அழிவு ஏற்பட்டதாகவும் இந்திய, பங்களாதேஷ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் 24 மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக அம்மாநில முதல்வர் தருண் கோகோய் தெரிவித்தார். இதனால் இந்த மாவட்டங்களுக்கும் வெளியிடங்களுக்குமான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

மிகப் பெரிய அளவில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் மக்களின் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும், இதனால் மக்கள் நிர்க்கதியான நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பீகார் மற்றும் அசாம் மாநிலங்களில் 200க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்ததுடன், 50 இலட்சம் மக்கள் தமது வீடுகளை இழந்து நிர்க்கதியான நிலையில் அரச கட்டடங்களில் தங்கியுள்ளனர்.

வெள்ளப் பெருக்கினால் பூட்டானையும், அசாமையும் இணைக்கும் கலாநதிப் பாலம் அடித்துச் செல்லப்பட்டது. தர்பங்காவிலுள்ள அகில இந்திய வானொலி நிலையம் தனது ஒலிபரப்புச் சேவையை நிறுத்திவிட்டது. அங்குள்ள ஒலிப்பதிவுக் கூடத்திற்குள் வெள்ளம் புகுந்ததால் ஒலிப்பதிவுக் கருவிகள் அனைத்தும் சேதமடைந்துவிட்டன. அத்துடன் வீதிகளுடனான போக்குவரத்து, ரயில போக்குவரத்து என்பன முற்றாகத் துண்டிக்கப்பட்டுவிட்டது.

பீகாரில் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் அங்குள்ள ரயில்வே நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளதாக பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

வீதிப் போக்குவரத்துக்கள் யாவும் துண்டிக்கப்பட்டதனால் நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும், பராதுருப்பினரும் விமானங்கள் மூலம் உணவு, மருந்துப் பொருட்களைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வருகின்றனர். அத்துடன், பாதிக்கப்பட்ட மக்கள் படகுகளிலும், ஹெலிகொப்டர்களிலும் மீட்கப்பட்டு வருகின்றார்கள்.

மோசமான காலநிலையாலும், தேவையான அளவு படகுகள் இன்மையாலும் மீட்புப் பணிகள் தாமதமடைந்து வருவதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

அசாம், பீகார் வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவும், வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், இந்திய மத்திய அரசு 212 கோடியை ஒதுக்கியுள்ளது. இதில் அசாமுக்கு மட்டும் 181 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பங்களாதேஷில் இடம்பெற்றுவரும் வெள்ளப்பெருக்கினால் 3 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டதுடன் நூற்றுக்கு மேற்பட்டோர் பலியாகினர்.

பங்களாதேஷின் நகரான சில்கெட் வெளித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு தனித்துள்ளதாகவும், நீரின் அளவு உயர்ந்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

1988ஆம் ஆண்டிற்குப் பின்னர் தற்போது தான் இந்த சில்கெட் நகரம் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டதுடன், நகரமே மூன்றில் இரண்டு பகுதி வெள்ளத்தில் மூழ்கிவிட்டதாகவும் நகர அதிகாரிகள் தெரிவித்தனர்.

பங்களாதேஷின் தலைநகரான டாக்காவிலுள்ள வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவிக்கையில்- இன்னும் அதிகளவிலான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாகவும், இதனால் தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்கள் இன்னமும் அதிகளவில் பாதிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தது.



இதேவேளை நேபாளத்தில் கடந்த வாரம் பெய்த, கடும்மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு தற்போது குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பலர் உயிரிழந்ததுடன், ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்ததுடன் பல விவசாயப் பண்ணைகள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளன.

# அமெரிக்க கடற்படை வீரர் ஹஸன் ஈராக்கில் வைத்து கடத்தப்பட்டார்

## அமெரிக்க அதிகாரிகள் தெரிவிப்பு



அமெரிக்கக் கடற்படையில் இருந்த அலி ஹஸன் ஈராக்கில் பணிபுரிந்தவேளை காணாமற்போயிருந்தார். இவர் கடத்தப்பட்டிருந்தார் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இவ்வாறு ஈராக்கில் வைத்து கடத்தப்பட்ட கோப்ரல் அலிஹஸன் (வயது 24) இரண்டு வாரங்களுக்கு முன்னர் லெபனானில் விடுவிக்கப்பட்டதாக தெரிவித்து அங்கு நின்றார்.

இவ்வாறு லெபனானில நின்ற இவர் தலைநகர் பெய்ரூட்டிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்குச் சென்றவேளை, அங்கிருந்து ஜேர்மனிலுள்ள அமெரிக்க இராணுவ வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளார்.

அங்கு அவர் மருத்துவ மற்றும் உள மருத்துவச் சிகிச்சைகளைப்பெற்று வருகிறார்.

இவரது கடத்தல் சம்பவம் தொடர்பாக அமெரிக்கக் கடற்படையின் குற்றவியற பிரிவு இவர் மீது விசாரணை நடத்தவுள்ளது.

ஈராக்கில் உள்ள அமெரிக்கக் கடற்படையில் பணிபுரிந்த இவர் படையிலிருந்து தப்பியோடியதாகவும், அதன் பின்பே தான் கடத்தப்பட்டதாகவும் தெரிவித்து வீடியோ நாடாவில் தோன்றியதாகவும், இது அவர் தான் தப்பிப்பதற்காக நடத்திய நாடகமாக இருக்கலாமென பென்ரகன் அதிகாரிகள் பி.பி.ஸிக்கு தெரிவித்ததாக பி.பி.ஸி செய்தியாளரான நிக் சைல்ஸ் தெரிவித்தார்.

எனவே, இவர் ஜேர்மனிலிருந்து அமெரிக்கா திரும்பியதும் இவர் மீது விசாரணை நடத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோப்ரல் அலிஹஸன் மிகவும் களைப்படைந்து காணப்படுவதாகவும், 9 கிலோகிராம் எடை குறைந்துள்ளதாகவும் ஜேர்மன் மருத்துவமனையின் பேச்சாளர் லான்ட்ஸ்ருவல் தெரிவித்தார்.

இதேவேளை, அலிஹஸன் ஈராக்கில் கடத்தப்பட்டவர், எவ்வாறு லெபனானிற்கு சென்றார் என்பது தெளிவில்லாமல் உள்ளது. ஏனெனில் ஈராக்கிலிருந்து லெபனான் 800 கிலோ மீற்றர்களாகும். இவர் ஈராக்கிலிருந்து லெபனானுக்கு நடந்து சென்றிருந்தால் இடையிலுள்ள சிரியா நாட்டின் எல்லைக்கூடாக எவ்வாறு சென்றார் என்பதும் புரியாத புதிராக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## எயிட்ஸ் நோயை கட்டுப்படுத்த

# அமெரிக்கா உறுதியளித்த நிதியை வழங்கவில்லையென அனான் சாடல்



உலகளாவிய ரீதியில் எயிட்ஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்கு அமெரிக்கா போதியளவு நிதியை வழங்கவில்லையென ஐ.நா. செயலர் கோபி அனான் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக கோபி அனான் பி.பி.ஸி. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது-

பயங்கரவாதத்திற்கெதிராக தற்போது நடைபெற்றுவரும் போரால் உலகளாவிய ரீதியில் ஒரே சமயத்தில், பெருவாரியான மக்களைத் தாக்கும் எயிட்ஸ் நோயை கட்டுப்படுத்துவது மறைக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.வின் எயிட்ஸ் ஒழிப்பு நடைவடிக்கைக்கு அமெரிக்கா மறறும் ஐரோப்பிய நாடுகள் போதுமானளவு ஆதரவினை வழங்கவில்லை.

இதேவேளை, எயிட்ஸ் ஒழிப்பு மாநாடு பாங்கொக்கில் நடந்து வருகிறது. இதில் பங்குபற்றிய ஐ.நா. செயலர் கோபி அனான் தெரிவித்ததாவது -

எயிட்ஸ் ஒழிப்புத் தொடர்பாக அமெரிக்கா உதவி வழங்குவதாக கூறினாலும் அவர்களது உதவி மிகவும் மெதுவாகவே கிடைத்து வருகிறது. எயிட்ஸ் ஒழிப்பிற்கு அமெரிக்க அதிபர் புஷ் 15 மில்லியன் டொலர்களைத் தருவதாகத் தெரிவித்தபோதும், அது இன்னமும் வந்துசேரவில்லை.

உதவி வழங்குவதாகத் தெரிவித்த அரசாங்கங்கள் தமது உதவிகளை வழங்கினால் இந்தச் செயற்திட்டம் உடன் ஆரம்பிக்கப்படும். இவ்வாறு இவர்கள் தமது உதவிகள் வழங்குவதை பின்னடித்தால் எமது செயற்திட்டமும் நீண்ட காலமாக இழுபட்டே செல்லுமெனவும் கோபி அனான் தெரிவித்தார்.

அத்துடன், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் வருடமொன்றுக்கு தலா ஒரு பில்லியன் டொலரைத் தருமென தாம் நம்புவதாகவும் கோபி அனான் தெரிவித்தார்.

எயிட்ஸின் பாதிப்புக் குறித்து அமெரிக்க அதிபர் புஷ்ஷிற்கு நன்றாகத் தெரியும். எனவே இதற்கு உதவி வழங்க வேண்டுமென்பதும் அவருக்கு விளங்கவேண்டுமெனவும் அனான் தெரிவித்தார்.

இதேவேளை, ஐ.நா. செயலர் கோபி அனானின் அமெரிக்கா மீதான இந்தக்குற்றச்சாட்டு நியாமற்றதென அதிபர் புஷ்ஷின் எயிட்ஸ் நோய் தொடர்பான ஆலோசகர் அன்ரனி பௌசி தெரிவித்தார்.

எயிட்ஸ் நோயைப் பரவாமல் தடுப்பதற்கு அமெரிக்கா மிகப் பெரிய பங்களிப்புச் செய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# துப்பாக்கியால் சுட்டபடி ஓடிய நேபாள இளவரசர் பராஸ்!

நேபாளத்தில் மன்னர் ஆட்சி முறையுள்ளது. கடந்த 2001ஆம் ஆண்டு நேபாள மன்னராக இருந்தவர் பிரேந்திரா.

மன்னர் குடும்பத்தில் ஏற்பட்ட தகராறில் பட்டத்து இளவரசர் திபேந்திர மன்னர் ராணி மற்றும் அரச குடும்பத்தினரைக் சுட்டுக்கொன்றுவிட்டு, தானும் தற்கொலை செய்துகொண்டார். மன்னர் மறைவுக்கு பிறகு ஞானேந்திரா மன்னராக முடிசூட்டிக்கொண்டார்.

மன்னர் ஞானேந்திராவின் 58 ஆவது பிறந்த நாள் விழா காட்மண்டு விடுதியில் நடந்தது. அந்த விடுதியில் இசை, நடன நிகழ்ச்சிகளும் நடந்து கொண்டிருந்தன. தடல்புடலாக விருந்து நிகழ்ச்சியும் நடந்தது.

அப்போது பட்டத்து இளவரசர் பராஸ் இன்னொரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அங்கு வந்து சேர்ந்தார். அப்போது இளவரசர் பராஸின் மனைவி இளவரசி ஹிமானி ஏதோ கேட்க இளவரசர் நிதானம் இழந்துவிட்டார்.

கோபமடைந்த இளவரசர் பாராஸ் தனது கைத்துப்பாக்கியை எடுத்து வானை நோக்கி சரமாரியாகச் சுட்டார். 4 தடவை சுட்டபடியே அவர் தாறுமாறாக ஓடினார்.

இதனால், விடுதியிலிருந்த விருந்தினர்கள் சிதறி ஓடினார்கள். துப்பாக்கியால் இளவரசர் சுட்டதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. அரச குடும்பத்தினர் இளவரசரை அமைதிப்படுத்தினார்கள்.

நேபாள இளவரசர் பராஸ் இப்படி ஏதாவது பிரச்சினைகளை ஏற்படுத்துவது இது முதல் முறையல்ல.

இளவரசர் முன்பு போதையில் கார் ஓட்டிச் சென்று ஒருவர் மீது மோதிவிட்டார். கார் மோதியதில் பலியானவர் ஒரு பாடகர். நேபாளப் பத்திரிகைகள் இதைப் பரபரப்பான செய்தியாக வெளியிட்டன.

# எய்ட்ஸ் ஒழிப்பு பிரசாரத்தில் யானைகள்



உலகம் முழுவதும் "எய்ட்ஸ்" நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் தாய் லாந்தில் வருகிற நேற்றுமுன்தினம் முதல் 19ஆம் திகதிவரை எய்ட்ஸ் ஒழிப்பு மாநாடு நடக்கிறது. பாங்கொக் நகரில் நடக்கும் இந்த மாநாட்டையொட்டி பாங்கொக் நகரில் அலங்கரிக்கப்பட்ட யானைகளின் ஊர்வலம் நடைபெற்றது.

சுகாதாரத்துறை அமைச்சர் சுதரத் கெயூராபாந்த் இந்த ஊர்வலத்தை தொடங்கி வைத்தார்.

தாய்லாந்தில் யானைகளும் அதிகம். அதேபோல் எய்ட்ஸ் நோயாளிகளும் அதிகமா என்பது தெரியவில்லை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பிரதம நீதியரசர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக பிரதம நீதியரசர் ஒருவர் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

தற்போது இலங்கையில் பிரதம நீதியரசராக பதவி வகிக்கும் சரத் என் சில்வாவே யாழ்ப்பாண நீதிமன்ற வளாகக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டுவதற்காக இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த அடிக்கல் நாட்டும் விழாவிற்கு பிரதம நீதியரசருடன் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் டி.சி.ஜெயதிலக நீதி அமைச்சின் செயலாளர் கே.எ.கம்லத், உலக வங்கியின் சட்ட நீதி புனரமைப்புத் திட்ட இயக்குநர் சுமித்ரா குணவர்த்தன பொறியியலாளர் சமந்தா சமரசிங்க, நிபுணத்துவ ஆலோசகர் மேவன் குணசேகர, மற்றும் டி. உதயகுமார் சீறா சர்வதேச கட்டட ஒப்பந்தக்காரர்கள் சார்பில் நிமால்லொக்குகே முதலானோர் இன்று காலை 8.30 மணியளவில் பலாலிக்கு விமானம் மூலம் வருகை தர உள்ளனர்.

இவர்களை விமான நிலையத்தில் வைத்து அரச யாழ். அதிபர் யாழ். மாவட்டத்தின் உள்மாவட்ட நீதிமன்றங்களின் நீதிவான்கள் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி. எஸ். வரதராஜா ஆகியோர் வரவேற்கவுள்ளனர். பிரதம நீதியரசரும் அவருடன் வருவோரும் முன்னதாக யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவின் இல்லத்துக்குச் சென்று பின் அங்கிருந்து யாழ். மேல் நீதிமன்றத்துக்கு செல்லவுள்ளனர்.

அங்கு பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்ற பின்னர் பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்புடனும் மங்கல வாத்திய இசையுடனும் பிரதம நீதியரசர் ஊர்வலமாக அழைத்து வரப்படுவார்.

காலை 10.30 மணியளவில் யாழ். நீதிமன்றத்துக்கான அடிக்கல் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவால் நாட்டப்படும்.

தொடர்ந்து யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு அங்கு விசேட கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா உட்பட பல முக்கியஸ்தர்கள் உரையாற்றவுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கோதுமை ஏற்றிவந்த கப்பல் திருமலை துறைமுகத்தில் விபத்து

அவுஸ்ரேலியாவில் இருந்து கோதுமை ஏற்றிவந்த கப்பல் ஒன்று திருகோணமலை துறை முகத்தில் விபத்துக்குள்ளாகியது.

ஒலிம்பிக் கலக்சி என்ற இந்தக் கப்பல் கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் திருகோணமலை துறைமுகத்திற்கு வந்திருந்தது.

இந்தக் கப்பல் நங்கூரமிட முயற்சித்தபோதும் அது தரைதட்டியதால் அதன் அடிப்பாகம் பலத்த சேதம் அடைந்தது.

## துப்பாக்கிச் ...

வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிலையிலேயே சேனாதிராசா நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் உயிழிந்தார். இவர் புலிகளில் மூத்த உறுப்பினர்களில் ஒருவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## நோர்வே தூதுவர்...

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் குழுவில் காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், சமாதான செயலக பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

நேற்றுக்காலை 10.30 மணி முதல் சுமார் இரண்டு மணிநேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதைத் தொடர்ந்து நோர்வேத் தூதுவர், புலிகளின் சமாதானச் செயலகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மனித உரிமைகள் செயலகத்துக்கும் விஜயம் செய்தார்.

அங்கு அருட்திரு. கருணாரத்தினம் அடிகள், மற்றும் டொக்ரர் மாலதி ஆகியோரையும் ஹான்ஸ் பிரட்ஸ்கர் சந்தித்துப் பேச்சு நடத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## போர் நிறுத்தத்தை...

தெரிவிக்கையிலேயே நோர்வே தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த சில வார காலமாக இடம பெற்றுவரும் வன்முறைகள் தொடர்பாகவும், கொழும்பில் நடைபெற்ற குண்டுவெடிப்பு தொடர்பாகவும், கிழக்கில் இடம்பெற்றுவரும் படுகொலைகள் தொடர்பாகவும் என்னுடைய கவலையை தெரிவித்துள்ளேன்.

எவ்வாறாயினும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்து கடைப்பிடிப்பது தொடர்பாக தெளிவாக இருப்பதாக இரண்டு தரப்பினரும் வலியுறுத்தினர்.

எனவே, நாம் மத்திஸ்தர்கள் என்ற ரீதியில் தொடர்ந்து செயல்படுவோம் என மேலும் தெரிவித்தார்.

# படுகொலைகள்....

சுக்குத் தெரியப்படுத்துமாறு வேண்டினோம்.

கருணா என்பவரை இலங்கை அரசாங்கமும், படைத்தரப்பும்தான் அவரை வைத்துப் பாதுகாத்து குழபபங்களை ஏற்படுத்துவதற்கு ஒழுங்குகளை செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை - குறிப்பாக ஈ.பி.டி.பி. போன்ற தேசவிரோத சக்திகளும் இவரோடு இணைந்து செயற்படுவதை அண்மைய நாட்களில் எல்லா மக்களும் அறிந்து இருக்கிறார்கள்.

ஈ.பி.டி.பி. போன்றவர்கள் தனக்கு உதவுவதாக வானொலி ஊடாக கருணா தன்னுடைய வாயாலேயே கூறியிருக்கிறார். அவர் ஏற்படுத்துகின்ற குழப்பங்கள் சம்பந்தமாக, அவருக்கு துணைபோவது, தற்பொழுது இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருக்கின்ற ஒரு அமைச்சர் அவரும் இவரோடு துணை போகின்றார் என அவரே ஏற்றுக்கொள்ளுகின்றார். அவற்றையும் நாங்கள் சுட்டிக்காட்டி இருக்கிறோம்.

எங்களைப் பொறுத்தவரையில் பேச்சுக்களுக்கு முன்னால் யுத்த நிறுத்த உடப்படிக்கை மிக மிக அத்தியவசியமானது. யுத்தமற்ற ஒரு சுமுகசூழல் இருக்கின்ற போது தான் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வது சாத்தியப்படும்.

ஆகவே, எங்களுடைய் ஒப்பந்த விதிகளுக்கமைய யுத்த நிறுத்த உடன்படிக்கையில் தெளிவாக 1.8 என்ற பந்தியிலே மிகவும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

வடக்கு - கிழக்கிலே ஏனைய ஆயுதக்குழுக்களின் ஆயுதக்களைவும், அவர்கள் வெளியேற்றப்பட வேண்டுமென்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆகவே, புதிய சூழலில் கருணா குழு ஒன்றை உருவாக்கி மறைமுகப்போரை மக்கள் மீதும், எமது பகுதியிலும் திணிக்கின்றபோது நிலைமைகளைச் சீர்குலைக்கும் என்பதை நாங்கள் சுட்டிக்காட்டி வருகின்றோம். இன்றும் சுட்டிக்காட்டி உள்ளோம்.

யுத்த நிறுத்த நிலைமைகள் சீர்குலைந்து போகிற நிலைமை தான் இன்றைக்கு கரிசனையோடு பார்க்கக்கூடியதாகவுள்ளது. அந்த விடயத்தை அதிகமாகப் பேசினோம்.

பேச்சுவார்த்தைகள் சம்பந்தமான எங்களது நிலைப்பாட்டை ஏற்கனவே தெளிவாக்கி இருக்கின்றோம். இடைக்கால நிர்வாகசபை பற்றிப் பேசுவதை, ஏற்கனவே பேசி அது நடைமுறைக்கு வந்த பின்பு இறுதித் தீர்வு பற்றிப் பேசுவதற்கு ஏற்கனவே எங்கள் நிலைப்பாடுகளைத் தெளிவாக்கியுள்ளோம். இது சம்பந்தமாக அரசாங்கம் தெளிவான நிலைப்பாடு களை அறியத்தருமாக இருந்தாற் தான் எங்கள் நிலைப்பாடுகளை நாங்கள் தொடரலாம்.

மாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னர் இடைக்கால நிர்வாகசபை சம்பந்தமாகப் புலிகளுடன் பேசலாம் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார். இது குறித்து எமக்கு அதிகாரபூர்வமாக செய்தி கிடைக்கவில்லை. எமக்கு அதிகரபூர்வமாக எமது தலைமைப் பீடத்துக்கு அந்தச்செய்தி கிடைக்க பின்பு எமது நிலைப்பாட்டை தெரிவிப்போம்.

உண்மையிலேயே சமாதான முயற்சிகள் ஒரு மிகப்பெரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு இருப்பதாலேயே அடிக்கடி நோர்வேத் தரப்பு வந்து நிலைமையைச் சீராக்க முயன்று கொண்டிருப்பதை நீங்கள் அவதானிக்கலாம்.

அவர்கள் இன்றைய பயணத்தின் போதும், அவர்கள் நிலைமையின் உக்கிரத்தை நினைத்து இரண்டு தரப்போடும் பேசி ஒரு இணக்கப்பாட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதையும், நிலைமை மிகவும் இறுக்கம் அடைந்திருப்பதை நீங்கள் உணரலாம்.

இரண்டு தரப்புக்களின் கருத்துக்களை இரண்டு தரப்போடும் நோர் வேப் பிரதிநிதி பரிமாறிக் கொண்டு தான் இருக்கிறார்கள். இது விடயமாக இன்று மிகவும் ஆணித்தரமாக நிலைமைகள் மோசமடைவதை நாங்கள் வலியுறுத்தி இருகின்றோம்.

அரசு தரப்பில் எடுக்கவேண்டிய காரியங்கள் இன்றைக்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் இந்த நிலைமைய சீராக்கு வதற்குத் துரிதமாகச் செயற்படவேண்டும். நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து. நிலைமைகளை மோசமாக்கும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று இன்றும் மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்தி இருக்கின்றோம்.

இதற்கு நோர்வே அனுசரணையாளர்கள் எடுக்கப்போகும் நடவடிக்கைகளில் செயற்படுகின்ற காரியங்கள் ஊடாகத்தான் அதனுடைய தன்மை எப்படியிருக்கும் என்பதை நாங்கள் எதிர்காலத்தில் வெளிப்படுத்தலாம்.

போர் நிறுத்த ஒப்பந்தங்களின் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி கொழும்பில் ஏற்பட்ட தற்கொலைத் தாக்குதல் வன்முறை இந்தப் பின்னணியில் இப்பொழுது இருககின்ற போர் நிறுத்த செயற்பாடுகள் குறித்து

நாங்கள் மிகக்கவலை அடைந திருக்கிறோம். எங்களுடைய மக்கள், ஆத்திரமடைந்துள்ளார்கள். விரக்தி அடைந்திருக்கின்றார்கள்.

இந்தச் சமாதான சூழ்நிலையில் படுகொலைகள் குழுப்பங்கள் தொடர்ந்து நடைபெறுவதென்பது உண்மையிலேயே எமது மக்களுக்கு கவலை மட்டுமல்ல அவர்கள் மிகவும் ஆத்திரமுற்றிருப்பதும் நீங்கள் அண்மைக் காலங்களில் பார்க்கக்கூடியதாக இருக்கும் என நினைக்கின்றேன்.

அநேகமாக சர்வதேச சமுகத்தின் கருசனைகளை நோர்வே அனுசரணையாளர்கள் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். உண்மையிலேயே எல்லோரும் கவலையடைந்திருக்கின்றார்கள்.

இந்தச் சமாதான சூழ்நிலைகள் நெருக்கடி நிலைக்குள் தள்ளப் பட்டிருப்பதும் குறிப்பாக யுத்த நிறுத்த சூழல் ஒரு இறுக்கமடைந்து கொணடிராத நிலைமை அண்மைக்காலங்களில் நடக்கின்ற நிகழ்வுகள் சர்வதேச சமுகத்துக்கு நீண்ட கவலையை ஏற்படுத்தி இருக்கின்றது என்று அனுசரணை யாளர்கள் எமக்குத் தெரியப்படுத்தி உள்ளார்கள்.

அவர்களும் மிகவும் கவலை அடைந்திருப்பதாக இன்றைக்கு எங்களுக்குத் தெரியப்படுத்தி இருக்கின்றார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் சர்வதேச சமூகம் அனைத்துமே இலங்கைத்தீவில் அமைதி வழியில், சமாதான வழியில் தீர்வு காணப்படவேண்டுமென்ற கரிசனையோடு இருக்கின்றார்கள்.

அந்த அப்படிடையில் இந்தியா உட்பட எல்லோருமே இன்று கவலை அடைந்திருக்கிறார்கள். நிலைமைகள் மோசமடைந்து; நெருக்கடி அடைந்து கொண்டிருப்பதனால் அனைவருமே கவலையடைந்திருக்கின்றார்கள்.

எல்லோரும் சமாதானச் சூழலைக கட்டியயெழுப்ப வேண்டுமென்று தங்களுடைய விருப்பங்களைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

# கதிர்காமர் ஒரு கெட்ட....

மட்டத்திலான உறவுகளை பேணிப் பாதுகாக்கவேண்டும்.

கலாசார பண்பாட்டு அடிப்படையிலான உறவுகள் பலப்படும் போது தமிழ் மக்கள் தொடர்பாகவும் அவர்களது விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் இந்திய மக்கள் கொண்டிருக்கும் கருத்துக்கள் மாற்றமடையும்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஒரு கெட்ட மனிதர் இவர் புதுடில்லியுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி வைத்துள்ளார். இவர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் மேற்கொண்ட பிரச்சாரங்களில் ஒரளவு வெற்றியும் கண்டார்.

இவர் இந்திய அரசாங்கம் தமக்கு இராணுவ ரீதியான உதவிகளை தரும்படி கோரியிருந்தார். அதை மறுத்த இந்திய அரசு இராணுவ ரீதியான ஒத்துழைப்பைத் தராது எனக்கூறியது. ஆனால் இவர் இங்கு வந்து இந்திய அரசு இராணுவ உதவியை இலங்கைக்கு தர உத்தரவாதம் அளித்துள்ளதாகப் பொய்ப் பிரசாரம் செய்தார்.

இலங்கைத்தமிழ் மக்களது பிரச்சினை தொடர்பாக தென்னிந்திய ஊடகங்கள் தவறான கருத்தக்களை தெரிவித்து வருகின்றன இதை இந்த ஊடகங்கள் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நமது ஈழநாடு கிளிநொச்சிப் பணிமனை
யாழ். சாலை, கிளிநொச்சி என்ற முகவரியில்
இன்று காலை 10.30 மணிக்கு
கிளிநொச்சி மேலதிக அரச அதிபர்
நா.வேதநாயகம்
அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது
என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
தொலைபேசி : 021-2285980 நிர்வாக இயக்குநர்.

London English College
No. 105, Arasady Road, Jaffna.
T.P: 222 -5889 Mobile : 94777 -252180, 94776 - 303539
Listen Understand Speak
முந்நிலும் மாறுபட்ட கற்கைநெறி முறை
Listening
உயர்நிலைப் பதவியில் உள்ளவர்களுக்கான தொடர்பாடல் ஆங்கில வகுப்புக்கள்.
Language Structure
Reading comprehension
Speech & Computer
இலவச அடிப்படை கணினி கற்கைநெறியும் இதழ்களும் வழங்கப்படும்
Educational excursion
IELTS/ TOEFL Classess
சிறுவர்களுக்கான வகுப்புக்களும் நடைபெறுகின்றன
Discussion & Writing
மேலதிக விபரங்களுக்கு
அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்
Practice Makes Perfect
BCNS No - 229 . Mitchan Road Tooting SW 1790, London U.K
(C-2757)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.